304

ஓம்

# ஞானசாகரம்

## (அறிவுக்கடல்)

இஃது

இருபத்தாறு ஆண்டுகளாக நடைபெறுந்

தனிச் செந்தமிழ் வெளியீடு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 APR 1928
MADRAS

பது, கசு.] விபவஞூ சித்திரை, வைகாசிமூ [இதழ், க, உ.

பொருளடக்கம்

மாணிக்கவாசகர் காலம், மூன்றாம்பகுதி.

(The Age of Saint Manickavachakar, the third part—reviews all the arguments that have appeared for the last 16 years and finally fixes his age in the third century A. D.)

ஆசிரியர்:

மறைமலையடிகள் என்னும்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,

பொதுநிலைக்கழக குரு,

பல்லாவரம்

பல்லாவரம், பொதுநிலைக்கழக நிலையத்தின்கண் உள்ள

டி. எம். அச்சுக்கூடத்திற்

பதிப்பிடப்பட்டது;

11th April, 1928.

ஒருபதுமக் கையொப்பம்] [நான்கு ரூபா

All Rights Reserved.

ஓம்

# மூவா நான்மறை விளக்கம்

(௧௨-ஆம் பதுமத்து, ௭, ௮-ஆம் இதழ்களின் தொடர்ச்சி)

இனி, 'மூவாநான்மறை' யாராய்ச்சிச் சிறுசுவடிக்காரர் கூறிய போலி யாராய்ச்சி யுரைகளை அவர் கூறிய வரிசைப்படியே யெடுத்துக்காட்டி அவற்றின் பொருந்தாமை தெரிப்பாம். எமது 'திருவாசக விரிவுரை' யின்கண் "இந்நிலவுலகத்து மொழிகளுட் பண்டைகாலந் தொட்டு இன்றுகாறும் இறவாது வழங்குவது தமிழ்மொழி ஒன்றேயல்லது பிறஅன்மையானும், என்றும் உளனாகிய இறைவன் தன்போல் என்றும் உளதாகிய தமிழ்மொழிக்கணன்றி இடையே இறந்துபட்ட ஆரியம் முதலான மொழிகளில் உண்மை நுண்பொருள்களை அறிவுறுத்தல் உயிர்கட்குப் பயன் படாமையின் அவன் அவற்றை அவற்றின்கண் அருளுதல் செலாமையானும்" என்று யாம் எழுதிய பகுதியில் அச்சிறுசுவடிக்காரர் தடைநிகழ்த்துவான் புகுந்து, 'ஆரியம் இறந்துபட்டதென்றால் ஆரிய மொழியா? அல்லது ஆரிய வேதமா?' என்று வினவிப், பார்ப்பனரும் பிறநாடுகளிலுள்ளாரும் ஆரியமொழியைப் பயின்றுவருதலின், அதனை இறந்துபட்டதென்றல் பொருந்தாதெனவுந், தமிழ்நூல்களிலும் பல இறந்துபட்டமையால் தமிழ்மொழியும் இறந்துபட்டதெனக் கூறலாமோவெனவும், ஆரியந் தமிழ் என்னும் இருமொழிகளுஞ் சிவபெருமானாலேயே அருளப்பட்டனவாகலின் ஆரியத்தைப் பழிப்போர் சிவபெருமானையும் பழித்தோரேயாவரெனவுங் கூறினார்.

யாம் மேலேகாட்டிய 'திருவாசகவிரிவுரைச்' சொற்றொடரிற் போந்த 'இறந்துபட்ட ஆரியம் முதலான மொழிகளில்' எனுஞ் சொற்கள் இறந்துபட்டது ஆரியமொழியே யல்லாமல் ஆரியநூல்களல்ல வென்னும் எமது கருத்தை நன்கு விளக்குதல் சிறிது கல்வியறிவுடையாரும் உணர்வர். அத்துணைச் சிற்றுணர்ச்சிதானும் இன்றி, இறந்துபட்டது ஆரியமொழியா? ஆரிய வேதமா? என்று வினவிகழ்த்திய சிறுசுவடிக்காரரை, அவர்க்கு மதிப்புரை தந்தாரும் அவரோடொத்தாருமே கொண்டாடத்தக்கவர்; அதுகிடக்க. இனி, ஆரியமொழி இறந்துபட்டது அன்று என்பதற்கு, அதனைப் பார்ப்பனரும் பிற நாட்டார் பலரும் பயிலுதலே சான்றாமென அவர் கூறினார். இது, மொழியினது பயனை யறியாமையாற் பிறந்த பிழையுரையாகும். மொழி என்பது கற்றார் முதற் கல்லாதவர் ஈறான எத்திறத்தவருந் தம்முடைய எண்ணங்களைத் தம்முள் ஒருவர் மற்றொருவர்க்குத் தெரிவித்துத் தமதுலக வாழ்க்கையினை நடப்பித்துக்கொள்ளப் பெரிது பயன்படுவதொரு கருவியாகும். எத்தனையோ ஆயிர ஆண்டுகளுக்கு முன்னமே மக்கள் தாம் ஒருங்குகூடி யளவளாவி வாழ்தற்கு இன்றியமையாக் கருவியாகப் பேச்சுப்பேசும் முறையினைக் கண்டறிந்தனர். தாயும் பிள்ளையும் தந்தையும் மகனும் மனைவியுங் கணவனும் உடன்பிறந்தாரும் உறவினரும் நண்பரும் பிறருந் தாந்தாம் எண்ணும் எண்ணங்களைத் தம்மவர்க்கு ஒலிகளின் வாயிலாகவே புலப்படுத்தி வந்தனராகலிற், பண்டை நாளில் அவ்வொலிகளின் தொகுதியாகிய மொழி பேச்சு வழக்கிலேயே இருந்தது. பிறகு, ஒருமொழியைப் பேசுவார் அறிவிலும் நாகரிகத்திலும் முதிர முதிரத், தமது நாகரிகவாழ்க்கை முட்டின்றி நடைபெறுதற்குக் கருவியாகத், தாம் பேசிவந்த சொற்களை எழுத்திலிட்டு எழுதும் முறையினைக் கண்டறிந்து அதனை வழக்கத்திற் கொணர்ந்தனர்; தாம் பேசிவந்தகாலங்களில் தம்மில் அறிவான் மிக்கார் பாடிய பாட்டுக்களையும், உரையளவாய்ச் செய்து வழங்கிவந்த நூல்களையும் பின்னர் எழுத்திலிட்டு எழுதி, அவை தம்மை அழியாமற் பாதுகாக்கலாயினர். எழுத்தெழுதத் தெரியாத காலங்களிலெல்லாம் மொழிகள் பேச்சளவாகவே வழங்கிவந்தன. நாகரிக மக்கள் மிகுந்த இந்நாளிலுங்கூட எழுத்தெழுதத் தெரியாத காட்டுமிராண்டிகளும் வேறுபல மக்கட் பிரிவினரும் ஆங்காங்குத் தொகை தொகையா யிருத்தலை எவருங்காணலாம். நகர்ப்புறங்களிலும் நாட்டுப்புறங்களிலும் இருக்கும் வில்லியர் வேட்டுவர் குறவர் பள்ளர் பறையர் செம்படவர் முதலானவர்களெல்லாந் தமிழ்மொழி பேசத் தெரிந்தவர்களே யல்லாமல் அதனை எழுதத் தெரிந்தவர்களும் அல்லர்; அதன்கண் எழுதப்பட்டிருக்கும் நூல்களைக் கற்கத்தெரிந்தவர்களும் அல்லர். தமிழ்நாட்டுக்குப் புறம்

அம் முதற் செய்யுளின் முதற்கண் வைத்து ஓதலாயினரென்பதே கொள்ளக் கிடக்குமாதலின், அதைப்போலவே 'பொய்யடிமை யில்லாத புலவ'ருந் தொகையடியாராயின் அவர் தம்மைத் தனியடியார்வரிசையி னிடையே புகுத்துரைத்தற்கு அவர் தம்மை அவ்வாறு வலிந்தேவுஞ் சிறந்த பிறிதோர் ஏது வேண்டப்படுமன்றே; மற்று அதற்கு அங்ஙனஞ் சிறந்த பிறிதோரேது ஒருவாற்றானும் பெறப்படாமையின், தனியடியாரை மொழியும் எழாஞ் செய்யுளிற் போந்த 'பொய்யடிமையில்லாத புலவர்' என்பாருந் தனியடியாரே யாவரல்லாற் றொகையடியாராதல் செல்லாதென்று கடைப்பிடிக்க.

அதுவேயுமன்றித், தில்லைக்கணுள்ள அடியாரை முதற்கண்வைத்து ஓதுங் குறிப்பினராயே சுந்தரமூர்த்திகள் 'தில்லைவாழந்தணரை' முதலாக வெடுத்துத் திருத்தொண்ட தொகை அருளிச் செய்தாரெனக் கொள்வார்க்குந், தில்லைக்கண் உள்ள தனியடியாரான திரு நீலகண்டநாயனரை முதற்க ணுரையாது, தொகையடியாரான தில்லைவா ழந்தணரைப் பின்றொடருந் தனியடியார் வரிசையினின்றும் வேறுபிரித்து முதலெடுத்தது, திருநீலகண்டநாயனர் தொடங்கி ஒன்பதாஞ்செய்யு ளிறுதிகாறுந் தாம்பாடும் அடியார் அத்தனைபேருந் தனியடியாராகவே இருத்தல் வேண்டுமெனக் குறித்த தமது கருத்துக்கு மாறுகாமற் றனியடியாரை யெல்லாம் ஒருவரிசைப்பட வைத்தற் பொருட்டும், அவருள்ளுந் தில்லையம்பதிக்கண் உள்ள தனியடியாரான திரு நீலகண்டநாயனரை அத் தனியடியார் வரிசையில் முதல் நிறுத்துதற்பொருட்டுமே யாமென்பது கொள்ளல்வேண்டும். அங்ஙனங் கொள்வுழியுந், தில்லைவா ழந்தணர்க்குப்பின் ஒன்பதாஞ்செய்யுளிறுதிகா றுங் கூறப்பட்ட அடியா ரத்தனைபேருந் தனியடியாரே யாவரெனவும், அதனால் அவ்வரிசையினிடைப்பட்ட பொய்யடிமையில்லாதபுலவருந் தனியடியாரே யாவரெனவுங் கொள்ளும் எமது கோட்பாடே நிலைபெறுதல் காண்க.

அற்றன்று, தில்லைக்கண் வாழ்வாராயினுங் குயவர் இனத்திற் சேர்ந்த திருநீலகண்டநாயனாரிலும், அந்தண வகுப்பினராகிய 'தில்லைவாழந்தணர்' சிறந்தமையிற் சுந்தரமூர்த்திகள் அவரையே முதற்கண்வைத்து ஓதுவாராயினரெனின்; நன்று சொன்னாய், அடியாருள் இன்னவர் உயர் குலத்தார், இன்னவர் இழிகுலத்தார் எனப் பிறப்புவேற்றுமைபற்றிய உயர்விழிவுகளை ஒருசிறிதுங் கருதாது, தாம் அந்தண குலத்திற் பிறந்தவராயிருந்துஞ் சுந்தரமூர்த்திகள் அவ்வடியவரெல்லாரையும் ஒத்த சிறப்பினராகவே கருதி, அவரெல்லார்க்குந் தனித்தனியே தாம் அடிமையாதலை மெய்பெறக் கிளந்தோதி யிருத்தலாலும்; பதியிலார் குலத்து வந்தாராகிய பரவை நாச்சியாரையும் வேளாள குலத்திற் பிறந்தாராகிய சங்கிலி நாச்சியாரையும் அவர் திருமணம் புரிந்து சாதிவேற்றுமையின்றி ஒழுகினமையாலும்; வேளாண்குலத்தினராகிய ஏயர்கோன்கலிக்காமநாயனார் தம்பால் அருவருப்புடையராயிருந்துந் தாம் அவர்பாற் பேரன்பு பூண்டு அவரைக் கண்டு வணங்கச் சென்றமையாலுஞ்; சாதி யுயர்வு கருதியே அவர் தில்லைவாழந்தணரை முதற்கணெடுத் துரைத்தாரென்றற்குத் தினைத்தனைச் சான்றும் அவர் அருளிச்செய்த திருப் பதிகங்களிலாதல் அவர்தம் வாழ்க்கையிலாதல் காணப்படாமையாலும்; அந்தணரென்னும் உயர்வுபற்றித் தில்லைவாழந்தணரை முதற்கணெடுத் தோதினாரென்னும் அவ்வுரை சுந்தரமூர்த்திநாயனார் திருவுளக்கிடைக்குமுற்றும் மாறான அடாதவுரையாமென் றொழிக.

'தில்லைவா ழந்தணர்' என்னுஞ் சொற்றொடர் முதல்வனால் எடுத்துக் கொடுக்கப்பட்டதாகாமற் சுந்தர மூர்த்திகளாலேயே அமைக்கப்பட்ட தொன்றாக இருக்குமாயின், தாம் ஓரினப்படக் கூறக் கருதிய தனியடியார் வரிசையினிடையே தொகையடியாராகிய 'தில்லைவா ழந்தணரைப்' புகுத்தல் முறையாகாமை கண்டே, அவரை அவர் அத் தனியடியார்வரிசையினின்றும் வேறாகப் பிரித்தெடுத்து முதற்கண் வைத்துமொழிந்தாரெனக்

கோடலே எல்லாவாற்றானும் இயைவதாமென்று கடைப் பிடிக்க.

எனவே, தனியடியார் வரிசையி னிடைப்பட்ட 'பொய் யடிமையில்லாத புலவர்' என்பார், தமது செந்தமிழ்ப் புலமைத் திறத்தால் 'திருவாசகம்,' 'திருச்சிற்றம்பலக் கோவையார்' என் னும் ஒப்புயர்வில்லா முழு மாணிக்கங்களை உலகிருள் இரியவுஞ் சிவவொளி சுடர்ந்து திகழவுந் தந்து, அவ்வாற்றால் 'மாணிக்க வாசகர்' என்னும் அருமைத் திருப்பெயர் பூண்டு, "உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லா தெங்கள் உத்தமனே" என முழு முதற் கடவுளாஞ் சிவபெருமான் ஒருவற்கே மெய்யடிமைத் திறம்பேணிய திருவாதவூரடிகளே யாவரல்லாற் பிறராகாமை திண்ணமாமென்று தெளிந்துகொள்க. அச் சொற்றொடர் இவ் வாறு திருவாதவூரடிகளையே யுணர்த்துதல் அறியாராய், அது கபிலர் பரணர் நக்கீரர் முதலான கடைச்சங்கப் புலவரையே குறிக்குமெனக் கூறிய நம்பியாண்டார் நம்பிகள் கூற்றுப் பிழை படுகின்றமையின், அது கொள்ளற்பால தன்றென விடுக்க. நக் கீரர் முதலான கடைச்சங்கப் புலவர்கள் "பரமனையேபாடுவார்" என்னுந் தொகையடியார் குழாத்துள் அடங்குதலின், அவரை யே மீண்டுங் கூறுதல் சுந்தரமூர்த்தி நாயனார்க்குக் கருத்தாகா மை வெள்ளிடைமலைபோல் விளங்கற்பாற்று.

அற்றேல், நம்பியாண்டார் நம்பிகள் திருநாரையூரின்கண் எழுந்தருளியிருக்கும் பொல்லாப்பிள்ளையார்பால் திருத்தொண் டர் வரலாறுகளைக் கேட்டுணர்ந்தாரெனத் திருமுறைகண்ட புராணங் கூறுதலிற், 'பொய்யடிமையில்லாத புலவர்' என்பதற்கு நம்பியாண்டார் கண்டபொருள் இறைவனே யுணர்த்தியதொன் றாதல் வேண்டும்; வேண்டவே, நம்பிகள் பிழைபட்டாரென மேலே சொல்லிய குற்றம் இறைவனையுஞ் சாருமாலெனின்; திருத்தொண்டத்தொகையிற் போந்த அடியாரின் வரலாறுகளை ஒருவர் தெரிதல் வேண்டினாராயின் அவர் தமது காலத்துள்ள கல்வி யறிவுடையார் பலரை வினவினால் அவை தம்மை நன்

கறிந்துகொள்ளலாம். நம்பியாண்டார் நம்பிகள் இருந்தகாலத்தில் இச்செந்தமிழ்வளநாடு சேரசோழபாண்டியரென்னுந் தமிழ் வேந்தரது ஆட்சிக்கீழதாய்த் தமிழ்க் கல்வியிலும் நாகரிகத்திலும் மிகவுஞ் செழிப்புற்றிருந்தது. சைவசமய உணர்ச்சியிலும் வைணவசமய உணர்ச்சியிலும் நிரப்பத் தோய்ந்த நல்லிசைப் புலவர்களும் ஆங்காங்குத் திரள்திரளாய் மலிந்திருந்தனர். பல்வகைக் கலைநூல் அறிவு நூல்களை ஓதுவார் தொகையும் விஞ்சி நின்றது. இவ்வுண்மை, நம்பியாண்டார் நம்பிகளே தாம் அருளிச்செய்த திருஞானசம்பந்தர் திருவுலாமாலையில்

"மறைபயில்வார் மன்னு வியாகரணக் கேள்வித்
துறைபயில்வார் தொன்னூல் பயில்வார்--முறைமையினால்
ஆகமங்கள் கேட்பார் அருங்கலைநூல் ஆதரித்துப்
போகம் ஒடுங்காப் பொருள் துய்ப்பார்—சோகமின்றி
நீதி நிலையுணர்வார் நீள்நிலத்துள் ஐம்புலனுங்
காதல் விடுதவங்கள் காமுறுவார்—ஆதி
அருங்கலைநூல் ஓதுவார் ஆதரித்து வென்றிக்
கருங்கலியை நீங்கக் கனல்வகுப்பார்—ஒருங்கிருந்து
காமநூல் கேட்பார் கலைஞானங் காதலிப்பார்
ஓமநூல் ஓதுவார் உச்தரிப்பார்" என்று கூறுமாற்றால்

இனிது விளங்கா நிற்கும். இத்துணை நூற்பயிற்சியும், அறிவுமிக்கார் குழுவும் மலிந்தோங்கிய காலத்தில் திருத்தொண்டர் வரலாறுகளை அறியாதாரும் இருப்பரோ? இராரன்றே. நாமிருக்கும் இக்காலந் திருத்தொண்டரிருந்த காலத்திற்கு ஆயிரமாண்டு பிற்பட்டதாயிருந்துந், திருத்தொண்டர் புராணத்திற் காணப்படாத வரலாறுகள் கூட இன்னும் அறிவுடையார் தமக்குள் வழங்கக் காண்டுமன்றே. இத்துணைப் பிற்பட்ட காலத்திலேயே அவ் வரலாறுகள் தொடர்ந்து வழங்குமாயின், இற்றைக்குத் தொள்ளாயிர ஆண்டுகட்கு முன்னரேயே அத் திருத்தொண்டரது காலத்திற்கு அண்மையிலிருந்த நம்பிகள் காலத்தில் அவை யின்னும் எத்துணைமிகுதியாய் வழங்கியிருத்

தல் வேண்டும்! ஆதலால், அவை மிக்கு வழங்கிய அப்பழங் காலத்திருந்த நம்பியாண்டார் நம்பிகள் அவ் வரலாறுகளை அஞ் ஞான்றிருந்த சைவசமயச் சான்றோர்பால் வினவி யறிந்தா ரெனக் கோடலே மெய்ம்மையாகுமன்றிப், பொல்லாப் பிள்ளை யார்பால் அவை தம்மைக் கேட்டுணர்ந்தாரென்றல் வெறும் பொய்க் கதையே யாகு மென்று கடைப்பிடிக்க. நம்பிகள் இருந்த காலத்தில் தமிழ்கற்ற சான்றோருந் தமிழ் நூல்களுந் தமிழ்ப் பயிற்சியும் அறவே யில்லையா யொழியினன்றோ, அத் துணைவறும் பாழாய்ப்போன காலத்திற் புதிதுதோன்றிய நம் பிகள் ஒருவர்க்குப், பொல்லாப் பிள்ளையாராகிய தெய்வமே அருள்கனிந்து முன்னின்று அவ் வரலாறுகளை அறிவுறுத்திற் றென்றுகோடல் பொருந்தும். அவர் இருந்த அக்காலம் அங் ஙனம் வெறும் பாழாதலின்றிக் கற்றுவல்ல சான்றோர் கூட்டங் களால் நிறைந்து கிடந்தமை நம்பிகள் அருளிச்செய்த பாட்டி னுலேயே நன்கு பெறப் படுதலாற், கற்றுவல்ல மக்க ளறிவினால் ஆகற்பாலனவற்றிற் கெல்லாங் கடவுளை வலிந்திழுத்துக் கட் டிய கதைகள் படுபொய் யெனவே விலக்கற்பாலனவா மென்க. இஞ்ஞான்று நம்மனோரில் அறிவிற் சிறந்தாராலுங் கண்டறியப் படாது மறைந்துகிடந்த நீராவி, மின் என்பவற்றின் ஆற்றல்களை யெல்லாங் கண்டறிந்து, 'இவை தெய்வத்தா லன்றி மக்களா லுஞ் செய்யப்படுமோ!' என்று வியக்கத்தக்க வாறான பொறி களை (இயந்திரங்களை) அமைத்து, அப் பொறிகளில் அவ் வாற் றல்களை யுய்த்துச், செயற்கருஞ் செயல்களை யெல்லாஞ் செய்து போதரும் மேனாட் டறிஞர் தாங் கண்ட நுட்பங்களுக் கெல் லாங் கடவுளை முன்னிழுத்துப் பேசாதிருக்க, இந் நுட்பங்களி லும் இவற்றையறியும் அறிவின்திறங்களிலும், எட்டுணை தானும் இலவாய்க், கலைவல்லாரை உசாவிய வளவானே அறியப்படுந் திருத்தொண்டர்வரலாறுகளை அறிதற்குமட்டுங் கடவுளை முன் னிழுத்துப் பேசுதல் பின்னுள்ளோர் கட்டிய வெறும் பொய்க் கதையாவதன்றி மற்றென்னை? ஆகவே, 'பொய்யடிமையில்லாத

புலவர்' என்பதற்கு நம்பிகள் செய்துகொண்ட பொருட்பிழை இறைவனைச் சாருமென்றல் ஆராய்ச்சி யுணர்வில்லார் கூற்று மென விடுக்க.

அல்லதூஉம், நம்பியாண்டார் நம்பிகள் அருளிச்செய்த 'திருத்தொண்டர் திருவந்தாதி'யை வழிநூலாகக் கொண்டு 'திருத்தொண்டர்புராணம்' என்னும் பெரியபுராணத்தை அருளிச்செய்த ஆசிரியர் சேக்கிழார்,

"அந்த மெய்ப்பதிகத்தடியார்களை
நந்தம் நாதனும் நம்பியாண்டார்நம்பி
புந்தியாரப் புகன்றவகையினால்
வந்தவாறு வழாமல் இயம்புவாம்" என்னும் நூற்பாயிரச் செய்யுளில், நம்பிகள் அடியார்வரலாறுகளைப் பொல்லாப்பிள்ளையார்பாற் கேட்டுணர்ந்தாரென உரையாமல் 'அவர்தமது அறிவினாலேயே நிரம்ப ஆராய்ந்து புகன்றனர்' என்பது போதரப் "புந்தியாரப் புகன்றவகையினால்" என்று விளங்க ஓதலின், நம்பிகள் 'பொய்யடிமையில்லாத புலவர்' என்பதற்குக் கொண்டபொருள் தம்மறிவிற்பட்டபடி கொண்டதேயல்லாமல் இறைவன் உணர்த்தியபடியன்றென்பது பின்னும் வலிபெறும். பொல்லாப்பிள்ளையார் நம்பிகட்கு அடியார்வரலாறுகளை யுணர்த்தியதுண்மையாயின், அத்துணைச்சிறந்ததோர் அருள்நிகழ்ச்சியைச் சேக்கிழார் சொல்லாதுவிடார். ஆகவே, அக்கதை சேக்கிழாருக்குப்பின் வந்தாரால் கட்டிவிடப்பட்டதாகுமென்றுணர்ந்து கொள்க.

அற்றேலஃதாக, மேலே காட்டியசெய்யுள் பெரியபுராணத் திருமலைச்சருக்கத்தின் ஈற்றிற் காணப்படுதலானும், அத்திருமலைச்சருக்கஞ் சேக்கிழாரால் இயற்றப்படாமற் பிற்காலத்தவரால் இயற்றிச் சேர்க்கப்பட்டதென நீரே பிறிதோரிடத்துக் கூறுதலானும், அச்செய்யுளை ஈண்டுச் சேக்கிழாரதுமொழியாக எடுத்துக்காட்டுதல் நுமதுகூற்றக்கே முரணும்போலுமெனின்; அற்றன்று; பெரியபுராணம் என்னுஞ் சார்புநூலுக்கு வழிநூலாவது இதுவெனக்காட்டும் "அந்த மெய்ப்பதிகத்தடியார்

களை" என்னுஞ்செய்யுளும், அதற்குமுதனூலாவது இன்னதெனக்காட்டும் "மற்றிதற்குப்பதிகம் வன்றொண்டர்தாம்" என்னும் அதற்கு முன்னுள்ள செய்யுளும் நூற்பாயிரத்திற்கு இன்றியமையாதனவாயிருத்தலின், அவை ஆசிரியர் சேக்கிழாராலேயே செய்யப்பட்டுத், "தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளும், எய்தவுரை"க்குந் தற்சிறப்புப்பாயிரமாய் நூன்முகத்தே "உலகெலாம்" என்னுஞ் செய்யுள் முதலாக நிற்கும் பகுதியில் நூற்பெயர் கூறுவதாகிய "இங்கிதன் நாமங் கூறின்" என்னுஞ் செய்யுட்குப்பின் நிறுத்தப்பட்டனவாகும். சேக்கிழாருக்குப் பிற்காலத்தே வந்தாரொருவர் 'திருமலைச்சருக்கத்'"தைப்புதிதாக இயற்றி அதனை பாயிரத்திற்குப்பின்னே சேர்க்கின்றுழித் தமது கருத்துக்கு இசையுமாறு அச்செய்யுட்களிரண்டனையும் பிரித்தெடுத்து அச்சருக்கத்தின் ஈற்றில் வைப்பாராயினரென்றுணர்தல்வேண்டும். இங்ஙனமே 'அநபாயசோழவேந்தன்' சிறப்புக் கூறுவதாகிய "கையின் மான்மழுவர்" என்னுஞ் செய்யுளுஞ் சேக்கிழாரற் செய்யப்பட்டு 'வெள்ளானைச்சருக்கத்'தில் நின்றதொன்றாகும்; திருமலைச்சருக்கம்பாடிச் சேர்த்த பின்னையோர் தமது கருத்து நிரம்புமாறு அதனையும் ஆண்டுநின்றும் பிரித்தெடுத்து இதன்கட் சேர்க்கலாயினரென்பதைச் 'சேக்கிழாரும் பெரியபுராணமும்' என்னும் எமதாராய்ச்சியுரையில் விளக்கிக் காட்டினும்; அதுநிற்க.

அவையெல்லாம் ஒக்குமாயினுந், தெய்வத்தன்மைவாய்ந்த நம்பியாண்டார் நம்பிகள் 'பொய்யடிமையில்லாத புலவர்' என்பதற்கு மெய்யல்லாப் பொருள்சொல்லிப் பிழைபடுதலுங் கூடுமோவெனின்; நம்பிகள் மெய்க்கல்வியிலுஞ் சிவபிரான்திருவடிப் பேரன்பிலுஞ் சிவனடியாரன்பின் திறத்திலுஞ் சிறந்த பெரியாரேயாயினுஞ், சைவசமயாசிரியரோடுஞ் சேக்கிழாரோடும் ஒத்த தெய்வப்பெற்றியுடையரல்லர். சைவசமயாசிரியர் நால்வரும் முழுமுதற் கடவுளை நனவிலேயே நேரேகண்டவர்; கடவுளின் திருவருட்டுணைகொண்டு எவராலுஞ்செயலாகா அரும் பெரும்

புதுமைகளை நிகழ்த்தி முழுமுதற் பெரும்பொருளின் உண்மையை நாட்டினவர்; சேக்கிழாரோ இறைவனே தமக்கு "உலகெலாம்" என முதலெடுத்துக்கொடுக்கத் தாம் திருத்தொண்டர் புராணம் பாடத்துவங்கினமையைத் தாமே நூற்பாயிரத்தில்,

"வெருளில் மெய்ம்மொழி வான்நிழல் கூறிய
பொருளின் ஆகுமெனப்புகல்வாமன்றே" என்று மொழிந்

திருத்தலின் அவருந் தெய்வப்பெற்றியுடையாரென்பது துணியப்படும். நம்பிகளும் இவரையொத்த தெய்வப்பெற்றியுடையாரெனக்கோடற்குச் சான்று ஏதும் இன்மையின், அவர் ஓரோவழிப்பிழைபடுதலும் இயற்கையேயாம். எத்துணைப்பெரியாரும் பிழைபடுதலுண்டென்பது தெருட்டுதற்கன்றே தெய்வத் திருவள்ளுவர்,

"அரியகற்று ஆசற்றார் கண்ணுந் தெரியுங்கால்
இன்மையரிதே வெளிறு" என்று அருளிச்செய்வாரா

யினரென்பது.

அற்றாயினும், உமாபதிசிவாசாரியார் தாம் இயற்றிய 'திருமுறைகண்டபுராணத்'தில், நம்பியாண்டார்நம்பிகள் பொல்லாப்பிள்ளையாரால் இயற்றிய புதுமைகளை எடுத்துக்காட்டி, அவர் தெய்வப்பெற்றியினரென்பது தேற்றினாரா லெனின்; நம்பிகள் பொல்லாப்பிள்ளையாரைக்கொண்டு மிகவியத்தகு நிகழ்ச்சிகளை விளைவித்தது உண்மையாயின், அவர் தாமியற்றிய 'திருநாரையூர் விநாயகப்பிள்ளையார் திருவிரட்டைமாலை'யிலாதல் ஏனைத் தம்பாடல்களிலாதல் அதனைச்சிறிதாயினுங் குறித்திருப்பர். என்னை? சமயாசிரியர்க்கு நிகழ்ந்த வியத்தகு அருணிகழ்ச்சிகள் அவர்தம் பாடல்களில் ஆங்காங்குக் குறிக்கப்பட்டிருத்தல் காண்டுமாகலின். மற்று, நம்பிகள் அருளிச்செய்த நூல்களில் அத்தகைய குறிப்பொன்றுங் காணப்படாமையானும், அவரது காலத்தையடுத்து வந்த ஆசிரியர் சேக்கிழார், நம்பிகள்பொருட்டு நிகழ்ந்தனவாகச் சொல்லப்படும் அருள்நிகழ்ச்சிகளை ஒரு தினைத்தனைதானுங் குறிப்பிடக் காணாமையானும் ஏதொரு

சான்றுமின்றி அவைகளை வெறுங்கதையாகச்சொல்லுந் 'திருமுறைகண்டபுராணம்', நுண்ணிய உண்மையாராய்ச்சியில் தலைநின்றவருஞ் சைவசித்தாந்த ஆசிரியரில் நாலாம் எண்ணுமுறைமைக்கண் நின்றவருமான 'உமாபதிசிவாசிரியர்' செய்ததாகாது ; அவர்பெயர்தாங்கிய வேறெவரோ ஒருவர் செய்ததாகல் வேண்டும். இதற்குப் பின்னும் ஒருசான்று காட்டுதும். நம்பியாண்டார்நம்பிகள் தாம் அருளிச்செய்த 'திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை'யின் ஏழாஞ்செய்யுளில்,

"பதிகம் ஏழ்எழுநூறு பகரும் மாகவியோகி"

என்று திருநாவுக்கரசுநாயனார் திருவாய்மலர்ந்தருளியன நாலாயிரத்துத் தொளாயிரம் பதிகங்களேயென்பது தோன்றக்கூறினார். மற்றுத், திருமுறைகண்டபுராணமோ கரு-ஆஞ் செய்யுளில்,

"ஒரு நாற்பத்தொன்பதினாயிரமதாகப், பெருநாமப்புகலூரிற் பதிகங்கூறி"

என அரசுகள் நாற்பத்தொன்பதினாயிரம்பதிகங்கள் அருளிச்செய்தாரெனக் கூறுநிற்கின்றது; நம்பிகளுக்கு முன்னிருந்த சுந்தரமூர்த்திநாயனாரும் "இணைகொள் ஏழெழுநூறிருபனுவல் ஈன்றவன் திருநாவினுக்கரையன்" என்று திருநின்றியூர்த்திருப்பதிகத்தில் அருளிச்செய்திருக்கின்றனர். இதனாலுந், 'திருமுறைகண்டபுராணம்' ஆராய்ச்சியுணர்வில்லாத ஒருவராற் செய்யப்பட்டதொரு நூலென்பது இனிது புலனாதலின், சான்றேதுமின்றி அதன்கட் சொல்லப்பட்ட வெறுங்கதையைக் கொண்டு நம்பியாண்டார் நம்பிகளைத் தெய்வப்பெற்றியுடையாரெனக்கோடல் இழுக்காமென்றுணர்ந்து கொள்க. எனவே, தெய்வப்பெற்றியுடையராகாத அவர் ஓரோவழி இழுக்குதல் இயல்பேயாகலின் அதுபற்றி அவர் இகழப்படார். அவர் எம்மனோரால் வழுத்தப்படும் மாட்சிநனியுடையசைவப்பெரியாரென்பதிலும் ஐயம் இல்லையென்க. அத்துணைப்பெரியாரேயாயினும் அவர் வழுவிய இடங்களிலும் அவரைப்பின்பற்றி யாமும்

வழுவி எமது மெய்யறிவைபிழத்தல் நன்றாகாது. நம்பிகளினுஞ் சுந்திரமூர்த்திநாயனரே பல்லாயிரமடங்கு சிறந்த தெய்வ மாட்சி யுடையராகலின், அவர் அருளிச்செய்த 'திருத்தொண்டத் தொகை'யிற் போந்த 'பொய்யடிமையில்லாத புலவர்' என்பதற்கு அவரது கருத்தறிந்து உண்மைப்பொருள் கோடலே சிறந்ததாகுமல்லாமல், நம்பிகளைப்பின்பற்றி நாயனரது கருத்துக்கு முரணான பொருள் கோடல் பெரிதும் ஏதமாமென்க.

அதுவேயுமன்றிப், 'பொய்யடிமையில்லாத புலவர்' என்பதற்கு நம்பிகள் கொண்டபொருளே அதற்குண்மைப் பொருளாயின், அதனை வழிநூலாய்க்கொண்டு சார்புநூல் செய்த ஆசிரியர் சேக்கிழார் தாமும் அதற்கு அப்பொருளைகொண்டு பாடியிருத்தல் வேண்டும். பொய்யடிமையில்லாத புலவர்க்கு நம்பிகள் கொண்டபொருள் கபிலர், பரணர், நக்கீரர் முதலான நாற்பத்தொன்பான் சங்கப்புலவரேயென்பது,

"தரணியிற் பொய்ம்மையிலாத் தமிழ்ச்சங்கமதிற் கபிலர்
பரணர் நக்கீரர் முதனாற்பத் தொன்பது பல்புலவோர்
அருமைக் கியுந் திருவாலவாயரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபலபாடும் புலவர்களே."

என்று அவர் திருத்தொண்டர் திருவந்தாதியிற் பாடியவாற்றால் துணியப்படும். மற்றுச் சேக்கிழார் அடிகளோ அதற்கு நம்பிகள் கொண்டவாறு பொருள் கொள்ளாது,

"செய்யுணிகழ் சொற்றெளிவுஞ் செவ்விய நூல் பலநோக்கும்
மெய்யுணர்வின்பயனிதுவேயெனத்துணிந்துவிளங்கியொளிர்
மையணியுங் கண்டத்தார் மலரடிக்கே யாளானார்
பொய்யடிமை யில்லாத புலவரெனப் புகழ்மிக்கார்."

எனப் பொதுப்படக் கூறிச்சென்றார். இச்செய்யுளிற் 'பொய்யடிமை யில்லாத புலவர்' என்பார்: சங்கப்புலவரே என்று கூறப்படாமையோடு, அவர் பலரென்பது குறிக்கப்படாமையும் என்னை? யென்று நுணுகி நோக்கும்வழி, ஆசிரியர் சேக்கிழார்க்கு நம்பியாண்டார் நம்பிகள் கொண்ட பொருள்

பொருத்தமாகக் காணப்படவில்லை யென்பது தானே போதரும்.

அற்றேற், 'பொய்யடிமை யில்லாத புலவர்' எனப்பட்டார் தனியடியாரே யாவரென்பதும், அவர் மாணிக்கவாசகப் பெருமானே யாவரென்பதுஞ் சேக்கிழார்க்குக் கருத்தாயின் அவைதம்மை அவர் என் வெளிப்படையாகக் கூறிற்றிலரெனிற், சேக்கிழார்க்கு எண்ணூறாண்டு பிற்பட்டதாகிய இஞ்ஞான்றுள்ள எமக்கு அவரது கருத்தைத் துணிபுறக் காட்டும் வலிய சான்று ஏதுங் காணப்படாமையின், அதனை இன்னது தானெனத் திண்ணமாய்க் காட்டுதல் இயலாதென விடுக்க. ஆயினுந், தமக்குமுன் வழிநூல் செய்த நம்பியாண்டார் நம்பிகள் அதற்குப் பொருந்தாப் பொருள் கொண்டமையானும், அவரோடு மாறுகொண்டு அதற்குத் தாங்கொண்ட தனியடியார் என்னும் பொருளை வெளிப்படையாக நாட்டுதலிற் சேக்கிழார்க்குக் கருத்தொருப்பா டில்லாமையானும் அவர் அதனை வெளிப்படச் சொல்லாது நெகிழ்ந்தோதிவிடலானரென்க. அல்லதூஉம், மாணிக்கவாசகப் பெருமானையும் அவர் அருளிச்செய்த 'திருவாசகம்,' 'திருச்சிற்றப்பலக் கோவையார்' என்னும் நூல்களையும் இஞ்ஞான்று ஆங்காங்குள்ள வீரசைவர்களும், வீரசைவமடங்களின் குரவர்களும், சைவசமயாசிரியர் ஏனை மூவரினும் அவர் அருளிச்செய்த 'தேவாரமறை' களினும் பார்க்க மிகுத்துக் கொண்டாடி வழிபாடாற்றி வருதலை உற்றுழாயுமிடத்து, இவ்வழக்கந் தொன்று தொட்டு வருவ தொன்றென்பது புலனாகாநிற்கும். வீரசைவமானது சைவசமயத்தின் வேறல்லாததாய்ச் சிவலிங்க வழிபாட்டில் மிக உறைத்து நிற்பதொன்றே யாயினும், அஃது இத்தமிழ்நாட்டிற்கு உரியதல்லாததாய்க், கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் வடக்கிருந்து தமிழ்நாட்டிற் குடிபுகுந்த வடுகக்கருநாடரால் கொணரப்பட்டதாகலின், இங்கிருந்த சைவசமயச்சான்றோர் அதனைத் தமது சமயத்தின் வேறுபட்ட தொன்றாகவே

கொண்டொழுகலாயினர். கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் ஈற்றில் வடுகநாட்டிலிருந்து தமிழ்நாட்டிற் குடிபுகுந்து வைகிய வீரசைவ மரபினர் பலருட், பாண்டிநாட்டில் வைகிய ஒரு தெய்வப் பார்ப்பனக் குடியிலிருந்து மாணிக்கவாசகப் பெருமான் தோன்றினமையாற் போலுஞ், சிவபெருமானால் நேரே ஆட்கொள்ளப்பட்டுச் சிவமாய் வயங்கிய அப்பெருமான், கடவுள் இல்லையென மறுத்து நாத்திகம்பேசிய இலங்கைப் பௌத்தர்களை நடுநிலைவழாமல் வழக்கில் வென்றுந், திருவாசகந் திருக்கோவையா ரென்னுஞ் செழுந்தமிழ் மறைத்தேனைத் தம் அருண்மணவாய் மலர் விண்டு அருளியுந், தில்லைச்சிற்றம்பலத்தே தோன்றிய சிவவொளியில் இரண்டறக்கலந்து சிவமாகியுந் தெய்வச் சைவசமயாசிரியராய் வீறித்திகழ்ந்தமை கண்டு, அவரைத் தமது மரபிற் பிறப்பித்துக்கொள்ளும் பெருந்தவம் ஆற்றிய வீரசைவச் சான்றோர்கள் அவரைத் தம் முதலாசிரியராய்க் கொண்டு அவரையும் அவர் அருளிய தமிழ்மறைகளையுந் தம் உயிர்போற்கொண்டு வழிபாடுசெய்து வருவாராயினர். இவ்வாறு, வடக்கிருந்துவந்து குடியேறிய வீரசைவமரபினரால் முதலாசிரியராய் வைத்து மாணிக்கவாசகப் பெருமான் வழுத்தப்படுதல் பற்றியே, தமிழ்நாட்டிலிருந்த சைவசமயச் சான்றோர்கள் நெடுங்காலம் வரையில் அவரைத் தமது சைவசமய குரவர் வரிசையில் வைத்துக் கொண்டாடிற்றிலர். இதனாலேதான் சுந்தரமூர்த்தி நாயனாரும் அவரது திருப்பெயரை விளங்கக்கூறாது 'பொய்யடிமையில்லாத புலவர்' எனச் சிறிது மறைத்துக் குறிப்பாற் கூறினாராதல் வேண்டும். சுந்தரமூர்த்தி நாயனாரது காலத்திற்குச் சிறிது பின்னேயெல்லாம் வடக்கிருந்து வந்த வீரசைவத்திற்கும் இந்நாட்டிலுள்ள சித்தாந்த சைவத்திற்கும் முன்னிருந்த வேற்றுமையுணர்ச்சி மறைய, அவ்விரண்டிற்கும் உரியார் ஒருவரோடொருவர் ஒருங்கு அளவளாவி இருவர்கொண்ட சமயமும் ஒருசமயமேயென உண்மை கண்டு உறவுகலந்தமையின், மெல்லமெல்ல மாணிக்கவாசகரை

யும் நாலாஞ் சைவசமயாசிரியராக இங்குள்ளா ரெல்லாரும் ஒருப்பட்டுக் கொள்ளும் பெரும்பேறு பெறலாயினரென்க. சுந்தரமூர்த்திநாயனர் காலத்தும் அவர்க்கு முற்பட்ட காலத்தும் இங்கிருந்த சைவசமயப் பெரியார் மாணிக்கவாசகப் பெருமானை அவ்வாறு சைவசமய ஆசிரியராய்க் கொண்டிலர்; அல்லதவ்வாறு கொண்டன ரென்பதற்குச் சான்றும் இன்று. சுந்தர மூர்த்திகளுக்குப்பின் பட்டினத்தடிகள் அருளிச்செய்த 'திருவிடைமருதூர் மும்மணிக்கோவை'யிலே தான் (உஅ) முதன் முதல் மாணிக்கவாசகப் பெருமான் ஏனை மூவரொடு சேர்த்து நாலாமவராகச் சொல்லப்பட்டிருக்கின்றார். இந்நூலுடன் 'பதினோராந் திருமுறை'யிற் கோக்கப்பட்டிருக்கும் ஏனை அருள் நூல் வரிசையில் நம்பியாண்டார் நம்பிகள் அருளிச் செய்திருக்கும் நூல்களும் இறுதியில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. நம்பிகள் தாமியற்றிய நூல்களைத் தாமே ஏனைப் பெரியார்தம் நூல்வரிசையிற் சேர்த்திரார் என்பது திண்ணம். நம்பிகள் காலத்திற்குப்பின் அவர்பால் மெய்யன்பு பூண்டொழுகிய மற்றொருவரே நம்பிகளின் நூல்களை அவற்றோடுடன் கோத்தாராகல் வேண்டும். இதற்கு, நம்பிகள் அருளிய 'திருத்தொண்டர் திருவந்தாதி'யின் துவக்கத்தில், நம்பிகளின் திருவடித் துணையை வேண்டிப் பாடியிருக்கும்,

"பொன்னி வடகரை சேர்நாரையூரிற் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர் பதிதே மரபுசெயல்
பன்னஅத் தொண்டத் தொகைவகைபல்கும் அந்தாதிதனைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற்பாதத் துணை துணையே."

என்னுஞ் செய்யுளே சான்றும். இச்செய்யுளை இயற்றினவர் இன்னாரென்பதும் இன்னகாலத்திருந்தாரென்பதுங் குறிக்கப்படாவிடினும், இச்செய்யுளிற் போந்த பொல்லாப்பிள்ளையார் கதையுந் 'திருமுறைகண்ட புராணத்'திலுள்ள பொல்லாப் பிள்ளையார் கதையும் ஒத்திருத்தலின், அத்திருமுறைகண்ட புராணம் இயற்றிய உமாபதி சிவாசாரியா ரென்பவரே இச்

செய்யுளையும் இயற்றிச் சேர்த்துத், 'திருத்தொண்டர் திருவந்தாதி'யையும் நம்பிகள் அருளிச்செய்த ஏனை நூல்களையும் பதினேராந் திருமுறையின் ஈற்றிற் கோத்தவரா யிருக்கலாமென்று கோடல் இழுக்காது. இங்ஙனம் நம்பிகளுக்குப்பின் வந்த ஓர் அன்பராற், பதினேராந் திருமுறையின் ஈற்றில் நிறுத்தப்பட்ட நம்பிகளின் நூல்களைத்தவிர, ஏனைப் பெரியார்தம் நூல்களெல்லாந் 'திருமுறைகண்ட புராணங்' கூறுமாறு நம்பிகளாலேயே கோக்கப்பட்டன வென்பது உண்மையாயின், அங்ஙனங் கோக்கப்பட்ட நூல்களுள் ஒன்றான 'திருவிடைமருதூர் மும்மணிக்கோவை'யும் அதனாசிரியரான பட்டினத்தடிகளும் நம்பியாண்டார் நம்பிகளிருந்த கி. பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதிக்கு முற்பட்டிருந்தமை பெறப்படும். பட்டினத்தடிகள் தாம் அருளிச்செய்த அத் 'திருவிடைமருதூர் மும்மணிக்கோவை'யில் (உ௮),

"வித்தகப் பாடல் முத்திறத் தடியருந்
திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்."

என்று திருஞானசம்பந்தர் அப்பர் சுந்தரர் என்னும் மூவரையும் மாணிக்கவாசகரையும் ஒருங்குசேர்த்து ஓதியிருக்கின்றார். முதன் மூவரை ஒருதொகையாக்கி முன்னும், மாணிக்கவாசகரொருவரைமட்டும் அம்மூவர்க்குப் பின்னுமாகவைத்து அவர் ஓதுதலை உற்றுக்காணுமிடத்து, அவர் காலத்திற்கு முன்னெல்லாம் அம் முதன் மூவருமே சைவசமய ஆசிரியராய்க் கொள்ளப்பட்டன ரென்பதும், அவரது காலத்திலேதான் மாணிக்கவாசகரும் அம்மூவரோடு நாலாமவராக வைத்துச் சைவ நன்மக்க ளெல்லாரானும் வழுத்தப்படலாயின ரென்பதும் நன்கு விளங்காநிற்கும்.

ஈதிங்ஙனமாகவுந், 'தமிழ்வரலாறு' உடையார், சைவ சமயாசிரியர் மூவருங் காலத்தான் முற்பட்டவராதல் பற்றி அம்மூவரையும் ஒருதொகையாக்கி முன்னும், மாணிக்கவாசகர் அம்மூவர்க்கும் பிற்பட்டவராதல்பற்றி அவரைப் பின்னு

மாக வைத்துச் சைவசமயச் சான்றோர்கள் வழங்குவாராயின ரெனக் கூறினர். கால முற்பிற்பாடு பற்றி மூவர் முன்னும் மாணிக்கவாசகர் பின்னுமாக வைக்கப்பட்டது உண்மையாயின், மூவர் காலத்திற்கும் முன்னிருந்தோரான 'திருமூல நாயனாரை'யும் அவர் அருளிச்செய்த 'திருமந்திர' நூலையும் அம்மூவர்க்கும் அவர் அருளிச்செய்த 'தேவாரத் திருமுறைக'ளுக்கும் முன்னரன்றோ வைத்து வழங்கல் வேண்டும்? அற்றன்று, திருமூலநாயனார் காலத்தால் முற்பட்டவரேனுங், கடவுளுண்மையை மறுத்த பௌத்தஞ் சமணம் முதலான புறச்சமயங்களை வழக்கில்வென்று சிவபிரானே முழுமுதற் கடவுளாதலைப் பல வியத்தகு தெய்வ நிகழ்ச்சிகளால் நிலைநிறுத்திய நால்வரைப்போல் திருமூலர் சைவவுண்மையினை நாட்டினவரல்லராகலின், அவர் அவர்க்குமுன் வைக்கப்பட்டில ரெனின்; இதுவும் எமது கொள்கைக்கே துணைசெய்வதாகும்; என்னை? சமயாசிரியர் நால்வரின் வைப்புமுறை அவரவர் சிறப்புப்பற்றியே வைக்கப்பட்ட தல்லாமல் அவர்தங் கால முற்பிற்பாடு பற்றியன்றென்பதே எமது கோட்பாடாகலானும், நீர் எழுப்பிய வினவும் அக்கோட்பாட்டையே நுதலுதலானு மென்பது. மேலுங், திருநாவுக்கரசு நாயனார் காலத்தால் திருஞானசம்பந்தப் பெருமானுக்கு முற்பட்டவராயிருந்தும், அவர் அறிவு முதிர்ந்த முதுமைக்காலத்துஞ் சமண்சமயக் கோட்பாட்டின் பொருந்தாமை யுணராராய் அதன்கண் அழுந்திநிற்ப, ஞானசம்பந்தப் பெருமானோ பால்பருகுங் குதலைச் செவ்வாய்க் குழவியாயிருந்த ஞான்றே அம்மையப்பரை நேரேகண்டு அவரால் ஞானப்பால் ஊட்டப்பெற்று எல்லாம் ஓதாதுணர்ந்த ஞானாசிரியராய் விளங்கினமை கண்டே அக்காலத்திருந்த சான்றோர் அவரை முன்னும் அப்பரை அவர்க்குப் பின்னுமாக வைத்து வழிபட்டு வரலானரென்க. இவ்வுண்மையினை நன்காய்ந்துணரமாட்டாத 'தமிழ்வரலாறுடையார்,' திருஞான சம்பந்தப் பிள்ளையார் முதலில் அருளொளியிற் கலந்தமைபற்றி

முன்னும், அதற்குச் சிறிதுகாலங் கழித்து இறைவன் திருவடிப்பே றெய்தினமைப்பற்றி அப்பர் அவர்க்குப் பின்னுமாக வைத்து வழுத்தப்பட்டனரென்றார்; இவ்வாறுரைக்கின்றுழி இவர் இடையிடையே வழுப்பட மொழிந்தனவும் பல; ஒரு காலத் தொருங்கிருந்த இருவரில் ஒருவர் முன்னும் மற்றவர் அவர்க்குப் பின்னுமாக இறைவன் திருவடிநீழல் அடைந்தமையினை ஓர் ஏதுவாக்கொண்டு முன்னடைந்தவரை முன்னும் பின்னடைந்தவரைப் பின்னுமாக வைத்து வழங்குதலை யாம் யாண்டுங் கேட்டிலேம், நூல்களிலாதல் ஆன்றோர் வழக்கிலாதல் அதற்குச் சான்றுங் கண்டிலேம். 'தமிழ்வரலாறுடையார்' ஒருவரே இவ்வாறு பொருந்தாவுரை நிகழ்த்தக்கண்டேம். சிறப்புடைய இருவரில் ஒருவரை முன்னும் ஏனையவரைப் பின்னுமாக வைப்பது, முன்வைக்கப்பட்டார் தனித் தலைமைச் சிறப்புக் கெழுமினாராயிருத்தலும் மற்றையார் அதுகெழுமாராயிருத்தலும் பற்றியேயாம்; இதுவே தொன்றுதொட்டு ஆன்றோர் நூல்வழக்கிலும் உலகவழக்கிலும் பிறழாது நடைபெறும் முறையாகும். இம்முறைக்கு மாறாகத் 'தமிழ்வரலாறுடையார்' சமயாசிரியர் தம்முள் ஒருவரை யுயர்த்துதலும் மற்றொருவரை அவரிற் றாழ்த்துதலும் அடாதசெயலென்கின்றார்! ஏன் அடாதசெயலாம்? அவரவர்க்குள்ள சிறப்புகளை உள்ளவாறு ஆராய்ந்தளந்து மிக்க சிறப்புடையாரை மிக உயர்த்துதலும், அத்துணைச்சிறப்பு வாயாதாரை அவர்க்கு அடுத்த நிலையில் வைத்து வழுத்துதலுங் குற்றமாமாறியாங்ஙனம்? தெய்வத் திருவள்ளுவரும்,

> "பொதுநோக்கான் வேந்தன் வரிசையால் நோக்கின்
> அதுநோக்கி வாழ்வார் பலர்."

என்று பொதுநோக்கே குற்றமுடைத்தாதலும், அவரவர்க் குரிய வரிசைக்குத்தக்க சிறப்புநோக்கே விழுப்பமுடைத்தாதலும் நன்கு தேற்றினாரல்லரோ? ஏனையாசிரியரினும் ஓராசிரியரைச் சிறந்தெடுத்துவைக்கும் உண்மையாராய்ச்சியால், அவ

ரவர் பால் அன்பு செலுத்துமுறை உண்மைவழிச் சென்று உறைத்து நிற்குமேயல்லாமல், அது பழுதுபடுதலும் ஏனை யோரை யிழித்தலுமாய் முடியுமோ? காதல்வழிநிற்குங் கற்புடை மனையாள் ஒருத்தி தன் காதற் கணவனேடொப்ப ஏனையுறவினர்பால் தலைப்பேரன்பு செலுத்தாமல் அவரவர்க்குத் தக்கவாறு அன்புபூண் டொழுகுவளாயின், அது கண்டார் அவளைப் புகழ்வரோ? இகழ்வரோ? எல்லாரும் அவளைப் புகழ்வதன்றே செய்குவர். அங்ஙனமே, நம் சமயாசிரியன்மார் எல்லாரையுங் குருட்டுத்தனமாய் ஒரேபடியில்வைத்து அன்புபாராட்டுதல் மெய்யன்புக்கு இழுக்காதல் உணர்ந்து, அவரவர்க்குரிய வரிசையில்வைத்து அவ்வவர்பால் உண்மையன்பு பூண்டொழுகுதலே சாலச்சிறந்ததா மென்று உணர்ந்துகொள்க.

இவ்வாறு ஆசிரியன்மார்க்குள்ள சிறப்பு முறையினை உண்மையான் உணர்ந்து அம்முறையைக் கடைப்பிடித் தொழுகுவது எம்முயிர்க் குறுதிபயத்தல் பற்றியன்றே, இவ்வாராய்ச்சியில் தலைநின்றவரான சேக்கிழாரடிகள், முதன்முதல் திருநாவுக்கரசு நாயனுர் சீர்காழியிற்போந்து திருஞானசம்பந்தப் பிள்ளையாரைக் கண்டு வணங்கி அவரோடும் அங்குள்ள திருக்கோயிலை வழிபடச் சென்றுழி அவ்விருவர்தந் தோற்றத்தினையுங் கூறப்புக்கவர் அவ்விருவர்க்குள்ள சிறப்பிலும் வேற்றுமை தோன்றத் தெரித்து,

“அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம்
அன்புசெறி கடலுமா மெனவும் ஓங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக்கண் இரண்டெனவும் புவனமுய்ய
இருட்கடிவுண் டவர்அருளும் அகிலமெல்லாம்
ஈன்றாள்தன் திருவருளு மெனவுங்கூடித்
தெருட்கலை ஞானக்கன்றும் அரசுஞ்சென்று
செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தாரன்றே.”*

* திருநாவுக்கரசு நாயனுர் புராணம், கஅடு.

என்று அருளிச் செய்வாராயினர். இதன்கண் அருட்கடலாவார் திருஞானசம்பந்தப் பிள்ளையாரெனவும், அன்பின்கடலாவார் திருநாவுக்கரசு நாயனாரெனவும், இருட்கடுவுண்ட இறைவனருளைச் சமணிருள் பருகிய திருஞானசம்பந்தப் பிள்ளையாராவரெனவும், உலகெலாமீன்ற இறைவியினருளைத் தாண்டகச் செந்தமிழ் பயந்த திருநாவுக்கரசு நாயனாராவரெனவும் ஆசிரியர் சேக்கிழார் அவ்விருவர் தமக்குள்ளும் உள்ள சிறப்பில் வேற்றுமை காட்டுதலை உற்றுநோக்க வல்லார்க்கு; அருள் என்பது கடவுட்டன்மையாதல் போல அதனோடொப்பிக்கப்பட்ட திருஞானசம்பந்தப் பிள்ளையாருந் தெய்வ அருள் மாட்சி யுடையராதலும், அன்பு என்பது அடியார்க்குரிய தன்மையாதல் போல அதனோடொப்பிக்கப்பட்ட திருநாவுக்கரசு நாயனாரும் அடிமைத்திறத்தில் தலைநின்ற மாட்சியுடையராதலும் பிரிந்தினிது விளங்காநிற்கும். இங்ஙனமே இவ்வாசிரியன்மார் இருவரையுஞ் சேக்கிழார் ஒருங்குகூற நேர்ந்துழியெல்லாம், அப்பரினும் பார்க்கத் திருஞானசம்பந்தப் பிள்ளையாரை மிக உயர்த்துவைத்து மொழிந்திருத்தலை ஆங்காங்கு நுணுகி யாராய்ந்துணர்ந்து கொள்க. இவ்வாறு சேக்கிழார் அவ்விருவரில் ஒருவரை ஏனையோரினும் மிகுத்துரைத்தல் கொண்டு, அவர் சம்பந்தரிடத்துப் போல அப்பரிடத்து மிக்க அன்பு வைத்திலரெனச் சொல்லுதல் ஒக்குமோ! அவர் அடியார்கள் அனைவரிடத்தும் பேரன்புபூண்டொழுகுந் திறத்தினரென்பது அவர் அவ்வவ்வடியார் அன்பின்றிறங்களைக் கல்லும் உருகப் பாடியிருக்குஞ் செந்தமிழ்ப் பாக்களால் இனிது புலனாகின்றதன்றோ? இங்ஙனமாகச் சேக்கிழார் அடியாரெல்லாரிடத்தும் நெகிழாத பேரன்பினராயினும், அவ்வடியார் தமக்குள்ளுந் தனிப்பெருஞ் சிறப்புடையார் தலைமைப்பாட்டினையும் அவர் உண்மைவழாது ஆங்காங்கு நன்கெடுத்துக் காட்டும் முறை எம்மனோராற் பெரிதும் போற்றற்பால தொன்றாமென்பது.

இனித், திருநாவுக்கரசு நாயனாரே தம்மினுந் திருஞான சம்பந்தப் பிள்ளையார் சிறந்தாராயிருத்தலை யெடுத்துமொழிந்து, அத்துணைமாட்சியுடைய அப்பிள்ளையார் தம்மோடு உடன்நிற்றலின் அவர் பொருட்டாகவாதல் இறைவன் தனது திருவருவினைத் தமது கட்புலனெதிரே காட்டியருளுதல் வேண்டுமெனக் குறையிரந்து,

"திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தாரும் நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே."

என்று திருவாய்மூர்ப் பதிகம் அ-ஆஞ் செய்யுளில் அருளிச் செய்திருத்தல் பெரிதும் நினைவிற் பதிக்கற்பாற்று. இன்னுந், திருவாவடுதுறையிற் சிவபெருமான் திருஞானசம்பந்தப்பிள்ளையார்க்கு ஆயிரம் பொன்முடிந்த கிழியொன்று அருள்சுரந்து அளித்ததனை அப்பரே மனங்கசிந்து,

"காயிரும் பொழில்கள்சூழ்ந்த கழுமலஊரர்க்கு அம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனாரே."

(திருவாவடுதுறைத் திருநேரிசை, க) என்று அருளிச் செய்தமையும் என்றும் நினைவுகூரற் பாலதாகும்.

இனி, இவ்விருவர்க்கும் பின்னேவந்து, அடியாரனைவர்க்குந் தாம் தனித்தனியே யடிமையாதலை மொழிந்து 'திருத்தொண்டத் தொகை' அருளிச்செய்த சுந்தரமூர்த்திகளும்,

"வம்பறு வரிவண்டு மணநாற மலரும் மதுமலர்நற்
கொன்றையா னடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்."

என்று திருஞானசம்பந்தப் பெருமானை மிக உயர்த்துக் கூறினாற்போல ஏனையடியாரைக் கூறிற்றிலர். இவ்வாறு திருஞானசம்பந்தர் காலத்திருந்த அடியார்முதல் இற்றைஞான்றைவந்த இராமலிங்க அடிகள் ஈறான சான்றோரெல்லாரும் ஞானசம்பந்தப் பெருமானை ஏனை யெல்லாரினும் பார்க்க மிகுத்துவைத்தே

வணக்கவுரை நிகழ்த்தக்காண்டலின், சமயாசிரியர் நால்வரில் ஞானசம்பந்தப் பெருமான் முன்வைத்து வழங்கப்பட்டது ஏனையாசிரியரிற் காணப்படாத தனிப்பெருஞ் சிறப்பு அவர் பாற் காணப்படுதல் பற்றியேயாம்; இவ்வுண்மையினை மறைத்து, அப்பருக்குமுன் சம்பந்தர் இறைவன் திருவடிநீழல் எய்தி னமை கொண்டே அவர் அப்பருக்குமுன் வைக்கப்பட்டா ரெனக் கரைந்ததும், சம்பந்தரும் அப்பர் முதலான ஏனையடிய ரும் ஒருங்கொத்த சிறப்பினரே யாவரெனப் பகுத்துணர்ந்து பாராது பகர்ந்ததுந் 'தமிழ் வரலாறுடையார்க்கு' ஏதமா மென்க. அப்பரே தமது அருமைத் திருமொழியால் திரு ஞானசம்பந்தரைத் தம்மினும் மிக உயர்த்துவைத்துப் பாடி யிருத்தலானும், அக்குறிப்பறிந்து சேக்கிழாரும் பலவிடங்களி லும் ஞானசம்பந்தரை அப்பரினும் பார்க்க உயர்த்துக் கூறுத லோடு,

"தொழுதணைவுற் றண்ட அரசு அன்புருகத்
தொண்டர்குழாத் திடையே சென்று
பழுதில்பெருங் காதலுடன் அடிபணியப்
பணிந்தவர்தங் கரங்கள் பற்றி
எழுதரிய மலர்க்கையால் எடுத்திறைஞ்சி
விடையின்மேல் வருவார் தம்மை
அழுதழைத்துக் கொண்டவர்தாம் அப்பரே என
அவரும் அடியேன் என்றார்."

என்று ஞானசம்பந்தர் தெய்வத்தலைமை யுடையராதலும் அப் பர் அவர்க்கு அடிமைத்திறம் பேணும் நிலையராதலும் விளங் கத் தேற்றுதலானும், நம்மாசிரியன்மார் தாமே அவ்வாறு அவர் தமக்குட் காட்டிய சிறப்பியல் வேற்றுமைக்கு மாறாக அவ ரெல்லாரையும் ஒருபடியராக வைத்துரைத்தல் பெரியதொரு குற்றமாமென்க.

அற்றேலஃதாக, திருநாவுக்கரசு நாயனர் தாம் தழுவிய சமண்மதந்துறந்து சிவபெருமான் திருவருட்பேற்றினை எய்

திய ஞான்று முதுமைமிக்கிருந்தா ரென்பதற்குச் சான்றென்னையெனிற் கூறுதும்: திருநாவுக்கரசு நாயனர் சிவபிரான் திருவருளாற் சைவசமயத்திற்குத் திரும்பித் திருவதிகையிற் சூலைநோய்தீர்ந்து அப்பெருமான் திருவடிக்கு ஆளானபிற் சில திங்களிலெல்லாஞ் சீர்காழிக்குப் போந்து திருஞானசம்பந்தப் பிள்ளையாரைக்கண்டு வணங்கி அவரோடு அளவளாயிருந்தன ரென்பது ஆராய்ச்சியாற் புலனுகின்றது. இதனை நன்காய்ந்து பாராத 'தமிழ்வரலாறுடையார்,' திருவதிகையில் ஆட்கொள்ளப் பட்டபின் அப்பர் அவ்விடத்திலேயே முப்பதாண்டுகள் இருந்தாராகல் வேண்டுமென்றும், அவர் மீண்டுஞ் சைவசமயத்தைத் தழுவியஞான்று நாற்பதாண்டின ரென்றும், அவர் சீர்காழியிற் போந்து திருஞானசம்பந்தப் பெருமானை வணங்கிய போது தான் எழுபதாண்டுக்கு மேற்பட்டவரா யிருந்தாரென்றும் உண்மைநிகழ்ச்சிக்கு முற்றம் முரணுகக் கூறினர் (தமிழ் வரலாறு, பிற்பாகம், முற்பகுதி, 50-ஆம் பக்கம்). சேக்கிழாரடிகள் பெரிதாராய்ந்து பாடியிருக்கும் வரலாறுகளைக் கருத்தாய் நோக்குவார்க்குத், தமிழ்வரலாறுடையார் கூறிய இவை முற்றும் மாறுகோளுரைகளாதல் விளங்காநிற்கும். திருநாவுக்கரசுகள் சமண்மதந்துறந்து சைவசமயம் புகுந்தமை தெரிந்தவளவானே சமண்மதத்தவர் வாளாஇரார்; அவர் தம் அரசனை ஏவி அவரை நீற்றறையில் இடுவித்தன் முதலான பொல்லாங்குகளை யெல்லாம் உடனே அவர்க்கு இழைத்தாராகல் வேண்டும். அப்பர் சிவபிரான் திருவருளைப் பெற்றதற்குப்பின் நெடுநாள் இடையீடின்றியே இத்தீங்குகள் சமண் அரசனல் அவர்க்கு உடனே விளைவிக்கப்பட்டன வென்பதற்குச் சேக்கிழார்,

"இன்ன தன்மையில் இவர்சிவ நெறியினை யெய்தி
மன்னு பேரருள் பெற்றிடர் நீங்கிய வண்ணம்
பன்னு தொன்மையிற் பாடலிபுத்திர நகரிற்
புன்மையேபுரி அமணர்தாம் கேட்டது பொறாராய்."

(திருநாவுக்கரசு நாயனர் புராணம், எசு) என்று அருளிச் செய்த வாற்றாற் புலனும். சமண் அரசன் தான் இழைப் பித்த பல கொடுந் தீங்குகளும் அப்பரை ஒரு சிறிதும் ஊறு படுத்தாமை கண்டு, கடைப்படியாக அவரை ஒரு பெருங் கற் பாறையிற் பிணிப்பித்துக் கடலில் இடுவித்தனன். அப்பரோ ஆண்டவன்சுரந்த பேரருட்டுணையால் அக்கல்லையே புணையா கப் பெற்று மிதந்து திருப்பாதிரிப்புலியூர்ப் பக்கத்துள்ள கடற் கரையைச் சேர்ந்து கரைமீதேறி அவ்வூரிலுள்ளாராற் பெரிதும் வியந்து பணிந்து வரவேற்கப்பட்டு, அங்கேயுள்ள திருக்கோயி லிற் சிவபிரானை வணங்கி அவன்றிருவடிக்கு "ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்" என்னுந் தீந்தமிழ்ப்பதிகமாலை சாத்திப், பின்னுந் திருவதிகை வந்துசேர்ந்து திருத்தாண்டகச் செந் தமிழ் பாடியபடியாய் அங்கே உழவாரத் திருப்பணி செய்து கொண்டு சிலநாள் வைகினர். இவரைப் பல கொடும் பொல் லாங்குகளால் வருத்திய சமண்வேந்தனை 'மகேந்திரவர்ம பல்லவன்' தான் கடைப்படியாக இழைப்பித்த தீங்குக்கும் அரசுகள் தப்பிக் கரையேறினரென்பது கேட்டதுணையானே, அவரது பெருமையுஞ் சிவபிரான் றிருவருள் அவர்க்கு உறு பெருந்துணையாய் நின்று தான்செய்வித்த தீங்குகளையெல்லாம் பாழ்படுத்தியதும் உணர்ந்து, நல்வினையால் உளந்திருந்தித் திரு வதிகை சென்று திருநாவுக்கரசரின் திருவடிமலர்களில்வீழ்ந்து, அவரது கடைக்கண்நோக்கம் பெற்றுச், சமண்மதம் பொய்யா தலுஞ் சைவசமயமே மெய்யாதலும் உணர்ந்து சிவபிரான் றிருவடிக்கு ஆளானன். இந்நிகழ்ச்சிக்குப்பின் அப்பர் திரு வதிகையினின்றும் புறப்பட்டுச் சிவபிரான் திருக்கோயில்க ளுள்ள பதிபலவுஞ்சென் றிறைஞ்சுதற்கு விழைவுமீதூரப் பெற்றாரென்று சேக்கிழாரடிகள் தெளித்துக் கூறுமாற்றால், அப்பர் முன்னும் பின்னுந் திருவதிகையிற் பல்லாண்டுகள் வைகினரல்லரென்பது இனிது பெறப்படும். ஈதிங்ஙனமாக வும், இவ்வுண்மை வரலாற்றுக்கு முழுமாறாய்த் 'தமிழ்வரலா

றுடையார்' முப்பதாண்டுகள் அப்பர் திருவதிகையில் வைகினு ரெனத் துணிபுரை நிகழ்த்தியது பெரியதொரு பொய்யுரையா மென விடுக்க.

இனி, மேற்காட்டிய வாறெல்லாம் அப்பர் சமண்மதந் துறந்து திருவதிகையிற் சைவசமயம் புகுந்து, சமண்மதத்தவ ரால் அளவின்றித் துன்புறுத்தப்பட்டுத், திருவருளால் அவற் றிற்கெல்லாந்தப்பி மீண்டுந் திருவதிகை சென்று இறைவனை வணங்கிச் சிலநாளங்கிருந்து, பின்னர்ச் சிவபிரான் திருக் கோயில்கடோறும் வணங்கப் புறப்பட்டவரையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகட்கெல்லாம் எவ்வளவுகாலஞ் சென்றதாகல் வேண்டு மென்று சிறிதமைந்து ஆய்ந்து காணவல்லார்க்கு, அது சற்றே றக் குறையப் பன்னிரண்டுதிங்கள் அல்லது ஓராண்டுக்குள்ளா கவேதான் இருக்கலாமென்பது நன்கு விளங்காநிற்கும்.

இனித், திருநாவுக்கரசு நாயனுர் திருவதிகையினின்றும் புறப்பட்டுத் 'திருத்தூங்கானைமாடம்,' திருவரத்துறை,' 'திரு முதுகுன்றம்,' 'திருத்தில்லை,' 'திருவேட்களம்,' 'திருக்கழிப் பாலை' முதலான திருக்கோயில்கட்குச் சென்று ஆங்காங்கு இறைவனைப் பரவிப்பாடிச் சிற்சிலநாள் தங்கி, மீண்டுந் தில்லைமா நகர்க்குப் போந்து ஆண்டுத் திருப்பணிசெய் தமரும்நாளில், மூன்றுட்டைச் சிறுமதலையாகிய திருஞானசம்பந்தர் சீர்காழி யிலே இறைவனையும் இறைவியையும் நேரேகண்டு அவரால் ஞானப்பால் ஊட்டப்பெற்று எல்லாம் ஓதாதுணர்ந்த எல்லாம் வல்ல ஞானசிரியராய் எழுந்தருளி யிருக்கின்றுர் என்னும் வியப்பான செய்தியை அடியார்கள் உரைப்பக் கேட்ட திரு நாவுக்கரசர் அளவுபடா வியப்பும் அவரைக்காணுங் காதலுந் தமதுள்ளத்தைக் கவர்ந்துகொள்ள, உடனே தில்லையைவணங் கிப் புறப்பட்டு, வழியிலே திருநாரையூரைப் பணிந்துபாடிப், பின் சீர்காழிமருங்கு சார்ந்தார். இவ்வாறு இவர் வருதலைக் கேட்ட திருஞானசம்பந்தப் பிள்ளையார் தாமும் அதற்காகப் பெருமகிழ்வுற்று, அவரை எதிர்கொளச் செல்லும் பொழுதில்,

எதிர்வருந் திருநாவுக்கரசரின் தோற்றத்தைச் சேக்கிழாரடிகள்,

"சிந்தை இடையறு அன்புந் திருமேனி தன்னில் அசைவுங்
கந்த மிகையாங் கருத்துங் கையுழவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற் பொலிதிருநீறும்
அந்தமிலாத் திருவேடத் தரசும் எதிர்வந் தணைய."*

என்று விளக்கிச் சொல்லியிருக்கின்றார். பிள்ளையாரைக் காண வந்த காலத்தில் திருநாவுக்கரசுகள் ஆண்டில் மிகமுதியரா யிருந்தனரென்பது, மேலைச்செய்யுளிற் போந்த 'திருமேனி தன்னில் அசைவும்' என்னுஞ் சொற்றொடரால் நன்கு அறிவுறுத்தப்படுதல் காண்க. எழுபது ஆண்டுக்கு மேற்பட்டார் ஒருவர் நடக்கும் பொழுதுதான் அவரதுடம்பு தள்ளாடுதலை உலகவழக்கில் எவரும் நன்குணர்வர். ஆகவே, அரசுகள் பிள்ளையாரைக் காணவந்த காலத்தில் எழுபது ஆண்டுக்கு மேற்பட்ட முதுமை யுடையரா யிருந்தனரென்பதூஉம், அதுபற்றியே பிள்ளையார் அவரை 'அப்பரே' என்றழைத்தன ரென்பதூஉம் இனிது விளங்காநிற்கும். அரசுகள் சமண் மதந்துறந்து சிவபிரான் திருவருளைப்பெற்று, அதனாற் சமண் வேந்தனாற் பலவாறு துன்புறுத்தப்பட்டுச், சிவபிரானருளாற் அவற்றிற்கெல்லாந்தப்பி, மீண்டுந் திருவதிகை புகுந்தவரையிற் சென்றகாலம் ஓராண்டின் அகமேயாமெனவும், அதன்பிற் றிருவதிகையினின்றும் புறப்பட்டுச் சில திருக்கோயில்களை வணங்கிக்கொண்டு அவர் திருஞானசம்பந்தப் பிள்ளையாரைக் காணவந்தவரையிற் சென்றகாலமும் ஓராண்டிற் குள்ளேயாகு மெனவுங் கோடலே சேக்கிழார் கூறும் வரலாற்றுரைக்கும் அறிவுவழக்குக்கும் ஒத்ததாக இருத்தலின், பிள்ளையார்பால் வந்தபோது அரசுகள் எழுபத்தைந்தாண்டு சென்ற முதியரா யிருந்தாராதலும், அமண்மதப் பற்றுவிட்டுத் திருவதிகையில் அவர் இறைவன் றிருவருட்பேற்றிற் குரியரானபோது எழு

* திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம், உஎ௦.

பத்து மூன்றாண்டினரா யிருந்தாராதலுந் தெற்றெனப் பெறப் படும். இவ்வுண்மை திருநாவுக்கரசு நாயனாரே தாம் திருவதி கையிலிருந்து திருவாய்மலர்ந்தருளிய,

"முன்பெலாம் இளையகாலம் மூர்த்தியை நினையாதோடிக்
கண்கண இருமிநாளுங் கருத்தழிந் தருத்தமின்றிப்
பின்பக லுணங்கலட்டும் பேதைமார் போன்றென்உள்ளம்
அன்பனாய் வாழமாட்டேன் அதிகைவீ ரட்டனீரே."

என்னுந் திருப்பாட்டாலும் நன்று வலியுறுத்தப்படும். இதன் கட் டாம் இளமைக் காலமெல்லாஞ் சமண்மதத்திலிருந்து கழித்தமையுங், கண்கனொன்று இருமி நினைவுகலைந்து துன் புறும் முதுமைக்காலத்தே தாம் அச்சமண்மதம்விட்டுச் சிவ பிரான் திருவருளைப் பெற்றமையும் அவரே விளங்கக்கூறுதல் காண்க.

மேலுந், திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்திருக்கும் திருப்பதிகத் தொகையினையுந், திருஞானசம்பந்தப் பிள்ளை யார் அருளிச்செய்திருக்குந் திருப்பதிகத் தொகையினையும் ஒப்பிட்டுக்காண்புழி, அரசுகள் சமண்மதந்துறந்து சிவபிரான் திருவருளைப் பெற்றபின் பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டு களில் இவ்வுலக்வாழ்வுநீத்து இறைவன் றிருவருளொளியில் இரண்டறக்கலந்தமை நன்கு தெளியப்படும். திருநாவுக்கரசர் அருளிச்செய்த திருப்பதிகத்தொகை நாலாயிரத்துத் தொளா யிரமேயாதலை, மேலே சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த திருப்பாட்டொன்றானும் நம்பியாண்டார் நம்பிகள் பாடியரு ளிய செய்யுளொன்றானும் இனித் விளக்கிக்காட்டினேம். மற் றுத், திருஞானசம்பந்தப் பெருமானோ பதினாறாயிரந் திருப் பதிகங்கள் அருளிச்செய்தன ரென்பது,

"நகரங் கெடப்பண்டு திண்டேர் மிசைநின்று நான்மறைகள்
பகரங் கழலவனைப் பதினாறுயிரம் பதிகம்
மகரங் கிளர்கடல் வையந் துயர்கெட வாய்மொழிந்த
நிகரெங் கிலிகலிக் காழிபிரா னென்பர் நீணிலத்தே."

என்று 'திருஞானசம்பந்தர் திருவந்தாதி,' கஈ-ஆஞ் செய்யுளினும்,

"பன்னு தமிழ்ப் பதினாறாயிர நற்பனுவல்
மன்னு புவியவர்க்கு வாய்ப்பவும்"

என்று 'திருஞானசம்பந்தர் திருவுலாமாலை'யிலும் நம்பியாண்டார் நம்பிகள் அருளிச் செய்திருக்குமாற்றால் ஐயுறவுக்கு இடனின்றித் துணியப்படும். பிள்ளையார் மூன்றாம் ஆண்டில் இறைவன் றிருவருளை நிறையப்பெற்றுத், தாம் திருமணங் கூடியநாளில் அவன் றிருவடிநீழலை எய்தினர். பிள்ளையார் திருமணங்கூடிய காலத்திற் பதினெட்டு அல்லது இருபதாண்டு நிரம்பப்பெற் றிருந்தாரென்றுகோடல் இழுக்காகாது; என்னை? பதினாறாண்டுக்குமேல் இருபதாண்டுக்குள் ஓர் இளைஞனுக்கு மணஞ்செய்து வைத்தலே பண்டைத் தமிழ்மக்கள் முறையாய்ப் போதரக்காண்டலின். ஆகவே, அருள்பெற்ற காலம் முதல் இறைவன் றிருவடிநீழலெய்திய காலம்வரையில் அதாவது சிறிதேறக்குறையப் பதினைந்தாண்டுகளில் திருஞானசம்பந்தப் பிள்ளையார் இந்நிலவுலகின்மீ தெழுந்தருளியிருந்து அருளிச்செய்த திருப்பதிகத்தொகை பதினாறாயிரம் ஆகின்றது. பிள்ளையார் பதினாறாயிரம் பதிகங்கள் அருளிச்செய்தற்குப் பதினைந்தாண்டுகள் சென்றனவாயின், திருநாவுக்கரசுகள் நாலாயிரத்துத் தொளாயிரம் பதிகங்கள் அருளிச்செய்தற்கு ஏழு அல்லது எட்டு ஆண்டுகளேதாம் சென்றனவாதல் வேண்டும். வடக்கே திருக்கைலாயம் வணங்கச் சென்றபோது அரசுகள் இடையே பாடாதிருந்தார்போலும்! மற்றுத், 'தமிழ்வரலாறுடையாரோ' அப்பர் நாற்பதாமாண்டிலேயே அருள்பெற்றுப் பின்னும் நாற்பதாண்டுகள் இந்நிலவுலகின்மீது எழுந்தருளியிருந்தன ரென்றார். அருள் பெற்றபின் அவ்வாறு அவர் நாற்பதாண்டுகள் இங்கிருந்தனராயிற் சிறிதேறக்குறைய முப்பதினாயிரந் திருப்பதிகங்களாவது அவர் அருளிச்செய்திருத்தல் வேண்டுமன்றோ? அங்ஙனமின்றி அவர் நாலாயிரத்துத்

தொளாயிரம் பதிகங்களை அருளிச்செய்திருக்கக் காண்ட லால், அருள்பெற்றபின் அவர் அத்துணை நீண்டகாலம் இங் கிருந்தாரென்றல் சிறிதும் உண்மையாகாது. எழுபதாண் டுக்குமேல் அருள்பெற்று எண்பதாம் ஆண்டளவில் அவர் சிவபிரான் திருவருளொளியிற் கலந்தனரென்னும் உண்மை முடிபினையே அவர் அருளிச்செய்த திருப்பதிகத்தொகை நாட் டுவதாகுமென்று கடைப்பிடிக்க. எனவே, திருநாவுக்கரசு நாயனர் தமது நாற்பதாம் ஆண்டில் அருள்பெற்றாரென்னும் உரை பொருத்தமில்லாததா மென்பதூஉம், அவரருளிச்செய்த திருப்பதிகத் தொகைக்கு எட்டு ஆண்டுகளும் வடநாடுசென்று மீண்டமைக்கு இரண்டாண்டுகளுங் கூட்ட அரசுகள் அருள் பெற்றபின் இந்நிலவுலகின்மீ தெழுந்தருளி யிருந்தகாலம் பத் தாண்டுகள் அல்லது மிகுதியாய்ச் சொன்னாற் பன்னிரண்டு ஆண்டுகளே யாமென்பதூஉம், அவ்வாற்றால் அவர் தமது எழுபத்துமூன்றாம் ஆண்டில் அருள்பெற்று எண்பத்தைந்தாம் ஆண்டில் இறைவன் திருவடிநீழலை எய்தினராகல் வேண்டு மென்பதூஉந் தாமே போதருமென்க.

மேலும், பழைய கல்வெட்டுகளின் ஆராய்ச்சியால் இஞ் ஞான்று புலனாயிருக்கும் உண்மை வரலாற்றுக் குறிப்புகளுக் கும் யாம் மேலே காட்டியவைகளே பொருத்தமாயிருத்தலையும் ஒருசிறிது காட்டுவாம். திருநாவுக்கரசு நாயனர் சமண்மதத்தி லிருந்து சைவசமயத்திற்குத் திரும்பியகாலையில் அவரைப் பல வாற்றால் துன்புறுத்தினவனுந், தான்செய்த துன்பங்கள் அத் தனையும் அவரைச் சிறிதும் ஊறுபடுத்தமாட்டா தொழிந் தமை அவர் சிவபெருமான் றிருவருட் பாதுகாப்பில் நின்ற மையாற்றான் என்பதனைத் தெளியவுணர்ந்த பின்னர் அவரது அருளாற் சிவபிரான் றிருவடிக்கு ஆளானவனும் 'முதலாம் மகேந்திரவர்ம பல்லவனே' என்பது இஞ்ஞான்று துணியப் பட்டுக் கிடக்கின்றது.* இவ்வேந்தன் கி. பி. 600-ஆம்

* Dr. G. Jouveau-Dubreuil's 'The Pallavas,' p. 37.

ஆண்டிலிருந்து 625-ஆம் ஆண்டுவரையில் அரசுபுரிந்தா னென்பதும் வரலாற்று நூலாசிரியரால் றணியப்பட்டதொன் றும்.* இவ்வேந்தன் 'மத்தவிலாசம்' எனப்பெயரிய நகைச் சுவை நாடகம் ஒன்றை வடமொழியில் ஆக்கி, அதிற் பாசுபத மதத்தினராகிய துறவியொருவரையும், ஒரு காபாலிகரையும் அவர்தம் மனைவியாரையும், ஒரு பௌத்தபிக்குவையும் உரை யாடவிட்டு, அவர் தம்மையெல்லாம் எள்ளனஞ் செய்திருக்கின் றான்.† இதனல் இவன் இந்நாடகம் ஆக்கியகாலத்திற் சமண் மதத்தவனுயிருந்தமை பெறப்படும். இவன் அரசாண்ட இரு பத்தைந் தாண்டுகளின் இறுதிப் பகுதியிலேதான், அப்பரின் அருட்பேராற்றலுஞ் சிவபிரானே முழுமுதற் கடவுளாதலுந் தெளிந்து அவரது திருவருளாற் சைவசமயத்தைத் தழுவி னன். அவ்வாறு சைவசமயத்தைத் தழுவியவுடனே, தென் னர்க்காடு மாகாணத்தின் கண்ணதான 'பாடலிபுத்திரம்' என் னும் நகரிற் சமண்முனிவர்க்குப் பெரியதோர் உறையுளா யிருந்த பெருஞ்சமண்பள்ளியினை இடித்து*, அதன்கட்பெற்ற கருவிகளைக் கொண்டு தன்சிறப்புப் பெயர்களில் ஒன்றான 'குணபரன்' அல்லது 'குணதரன்' என்னும் பெயரால் 'குணதரேச்சுரம்' என்னுஞ் சிவபிரான் திருக்கோயிலைத் திரு வதிகையிற் கட்டுவித்தான்; இது,

"வீடறியாச் சமணர்மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனுந் திருவதிகை நகரின்கட் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்திலமண் பள்ளியொடு பாழிகளுங்
கூடவிடித் துக்கொணர்ந்து குணதரவீச் சரமெடுத்தான்."

என்று ஆசிரியர் சேக்கிழார் கூறுமாற்றானும் அறியப்படும்‡.

---

* Dr. V. Smith's 'The Early History of India,' 1914 edition, p. 472.

† 'Some Contributions of South India to Indian Culture' by Dr. S. Krishnaswami Aiyangar, p. 204.

‡ திருநாவுக்கரசு நாயனர் புராணம், கசசு.

அதுவேயுமன்றித், திருச்சிராப்பள்ளி, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு முதலான மாகாணங்களிலுள்ள மலைகள் பலவற்றைக் குடைந்து அவற்றின்கட் சிவபிரானுக்குத் திருக்கோயில்களும் அமைப்பித்தான். இவ்வாறு இவன் சைவசமயத்தைத் தழுவியபின் பல திருக்கோயில்களை அமைப்பித்தற்கு ஐந்தாண்டுகளேனுஞ் சென்றதாகல் வேண்டும். இவனது அரசு கி. பி. 625–ஆம் ஆண்டோடு முடிவுபெறுதலால், இவன் சைவசமயத்தைத் தழுவியது கி. பி. 620-ஆம் ஆண்டில் நிகழ்ந்ததாகல் வேண்டும். அவ்வாண்டிலேயே திருநாவுக்கரசருஞ் சமண்மதந்துறந்து சைவசமயம் புகுந்தாராகல் வேண்டும்; புகுந்த இரண்டு ஆண்டிற்குள்ளெல்லாம் அவர் திருஞானசம்பந்தப் பெருமானைச் சீர்காழியிலேவந்து கண்டு வணங்கினமையினை மேலே விளக்கிக்காட்டினும். அக்காலையிற் சம்பந்தப் பெருமான் நாலாண்டு சென்ற சிறு மதலையாகவே இருந்தனரென்பது சேக்கிழாரடிகள் அஞ்ஞான்றுநிகழ்ந்த வரலாறுகளை எடுத்துரைக்குமாற்றால் துணியப்படும். அதன்பிற் சில திங்கள்கழித்து அப்பருந் திருஞானசம்பந்தருந் திருப்புகலூரில் ஒருங்கு கூடியபோது, அவர்கள்பாற் சிறுத்தொண்ட நாயனார் வந்து அவர்களைவணங்கி அவர்களோடு அளவளாவியிருந்தனரென்பது,

“நீலநக்கடிகளும் நிகழ்சிறுத் தொண்டரும்
உடனணைந் தெய்து நீர்மைச்
சீலமெய்த்தவர்களுங் கூடவே கும்பிடுஞ்
செய்கைநேர் நின்று வாய்மைச்
சால்பின்மிக் குயர்திருத் தொண்டினுண்
மைத்திறந் தன்னையே தெளியநாடிக்
காலமுய்த் தவர்களோ டளவளா
விக்கலந் தருளினார் காழி நாடர்.”*

என்று சேக்கிழார் கூறுமாற்றான் அறியப்படும். இந்நிகழ்ச்

* திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம், ௫௨௩.

சிக்குச் சிலதிங்கள் முன்னே திருஞானசம்பந்தர் திருச்செங் காட்டங்குடிக்கு எழுந்தருளிய போதுஞ், சிறுத்தொண்டர் தம் அருமைப் புதல்வர் சீராளருடன் சம்பந்தப் பெருமானை வரவேற்று வணங்கினமை,

"கூராரல் இரைதேர்ந்து குளமுலவி வயல்வாழும்
தாராவே மடநாராய் தமியேற்கொன் றுரையீரே
சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
பேராளன் பெருமான்றன் அருளொருநாட் பெறலாமே"

என்று திருஞானசம்பந்தப் பெருமானே திருச்செங்காட்டங் குடித் திருப்பதிகத்தில் அருளிச்செய்தவாற்றால் தெளியப் படும். இங்ஙனமாகச் சீராளருடன் சிறுத்தொண்டரோடும் அளவளாவிப், பின்னர்ச் சில திருக்கோயில்களை வணங்கிக் கொண்டு பிள்ளையார் அப்பருடன் திருமறைக்காடு வந்து சேர்ந்து, அங்குள்ள திருக்கோயிலின் முன்வாயிற்கதவுகள் எவரானுந் திறக்கக்கூடாவாறு அடைபட்டு நிற்ப, அவற் றைத் திறக்கவும் அடைக்கவுஞ் செய்து, அம்மையப்பரை வணங்கியபடியாய் அங்கே சிலநாட்கள் வைகியிருப்புழி, மது ரையிற் பாண்டிமன்னன் மாதேவியாரான 'மங்கையர்க்கரசி யார்' மதுரைக்கு எழுந்தருளுமாறு வேண்டிச் சம்பந்தப்பெரு மானுக்கு ஒரு திருமுகம்விடுத்தனர். அவரது வேண்டுகோட் கிணங்கிப் பெருமானும் மதுரைக்கெழுந்தருளி அமைச்சர் குலச்சிறை நாயனராலும் மங்கையர்க் கரசியாராலும் வணங்கி வரவேற்கப்பட்டு இறைவனைவழுத்தி அடியார்குழாத்துடன் அங்கேவைகினர். மங்கையர்க்கரசியார் சைவசமயந் தழுவின வராயிருந்தும், அவர்தங் கணவரான கூன்பாண்டியமன்னரோ அப்போது சமண்மதந் தழுவினராயிருந்தார். சமண்மதம் பாண்டிநாடெங்கும் பரவியிருந்தது. சமண்முனிவர்கள் தம் மதம்புகுதாத சைவர்களை மிகவுந் துன்புறுத்திவந்தனர். சைவ சமயாசிரியரான திருஞானசம்பந்தரும் அவருடன் பெருந் திரளான சிவனடியார்களும் மதுரைக்கு வந்திருத்தலைக்கண்டு

மனம்பொருத சமண்முனிவர்கள் தம் பாண்டிமன்னனது உடன்பாடுபெற்றுப், பிள்ளையாரும் அடியார்களும் அமர்ந்திருந்த திருமடங்களிலே ஒருநாள்இரவில் தீயிட்டனர். அவர்களிட்ட தீப்பற்றித் திருமடங்கள் எரிதலைக்கண்ட பிள்ளையார், இது பாண்டிமன்னன் ஒருப்பாடுபெற்றுச் சமணர்செய்ததென உணர்ந்து,

"செங்கண் வெள்விடை யாய்திரு வாலவாய்
அங்கணா அஞ்ச லென்றருள் செய்யெனைக்
கங்குல் ஆரமண் கையர் இடுங்கனல்
பங்கமில் தென்னன் பாண்டியற் காகவே."

என இறைவனை வேண்டிப்பாட, அத் தீயானது அவிந்து, உடனே பாண்டிமன்னன் உடம்பைக் கொடியதொரு வெப்புநோயாய்ச் சென்று பற்றிக்கொண்டது. அக்கொடுநோய் சமண்முனிவர்களால் தீர்க்கலாகாதவாறு பெருகவே, மங்கையர்க்கரசியார் அருளுரைகேட்டு அப்பாண்டிமன்னன் திருஞானசம்பந்தப் பிள்ளையாரைக் குறையிரந்து தன்பால்வருவிக்கப், பிள்ளையாரும் அவன்பாற்சென்று அவன் இடுவித்த இருக்கையில் அவன்மருங்கே அமர்ந்தருளினர். அப்போது மங்கையர்க்கரசியாரும் பிள்ளையாரதுபக்கத்தே யிருப்பச், சமண்முனிவர்கள் அவர்க்கு எதிர்பக்கத்தே யிருந்து அவரைப் பலவாறு இழித்துப்பேசலாயினர்; அதுகண்டு அரசியார் உளந்துடித்து 'எம் பச்சிளந் தெய்வப் பெருமானை இவர்கள் இவ்வாறு இகழ்ந்துரைப்பதே!' என்று தங்கணவனுரை நோக்கி வருந்தி மொழிந்தனர். அதுகண்ட பிள்ளையார் அரசியார்க்கு ஆறுதல் உண்டாம்பொருட்டு,

"மானி னேர்விழி மாதராய் வழுதிக்கு
மாபெருந் தேவிகேள்
பால்நல் வாய்ஒரு பாலன் ஈங்கிவன்
என்றுநீபரி வெய்திடேல்

ஆனைமாமலை யாதியாய இடங்களிற்
பல அல்லல்சேர்
ஈனர்கட் கெளியேன் அலேன்திரு
வாலவாய்அரன் நிற்கவே."

என்னுந் திருப்பாட்டை முதலாக உடைய திருப்பதிகத்தினைத் தமது அருமைத் திருவாய்மலர்ந்தருளிப் பாண்டிமாதேவியா ருளங்குளிரவுஞ் சமண்முனிவர் வன்னெஞ்சந் திடுக்கிட்டு ஒடுங்கவுஞ் செய்திட்டார். இங்ஙனம் அருளிச்செய்த இத் திருப்பதிகச் செய்யுளிற் பிள்ளையார் தம்மைப் 'பால்பருகுத லாற் பால்மணங்கமழும் வாயினையுடைய ஒருபாலன்' என்று குறிப்பிடுதல் மிகவுங் கருத்திற்பதிக்கற்பாலது. இதுகொண்டு, திருஞானசம்பந்தப் பெருமான் மதுரைமாநகர்க்கு எழுந்தரு ளிய ஞான்று பால்பருகும் பருவத்தினையுடைய சிறுபிள்ளையா யிருந்தனரென்பது ஐயமின்றிப் பெறப்படுகின்றதன்றோ? பால் பருகும் பிள்ளைமைப்பருவம் ஐந்தாண்டுக்கு மேற்படுதலின்மை யின், மதுரையிலிருந்து பிள்ளையார் அருளிச்செய்த இத்திருப் பதிகச் செய்யுளில் தம்மைப் 'பானல்வாயொருபாலன்' என்று குறிப்பிட்டது தாம் அக்காலையில் ஐந்தாட்டைப் பருவத் தினரா யிருந்தமைபற்றியேயாம். இவர் இறைவியால் ஞானப் பால் ஊட்டப்பட்ட நாள்முதல் மதுரைக்குச் சென்றவரையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைச் சேக்கிழாரடிகள் கூறுமாறுவைத்துக் கணக்குச்செய்யின், அவைதமக்கு இரண்டு ஆண்டுகளே செல் லுதல் நன்கறியப்படும். மதுரைக்குச் சென்றகாலத்திற் பிள்ளை யார் தாமேதம்மைப் பால்பருகும் பாலனென்று குறித்த உரை யுஞ் சேக்கிழாரது வரலாற்றுரையும் ஒத்து நிற்கின்றன. ஆகவே, பிள்ளையார் ஞானப்பாலுண்டது தமது மூன்றும் ஆண்டிலும், மதுரைக்குச்சென்றது தமது ஐந்தாம் ஆண்டி லுமே யாமென்பதும், மதுரைக்குச்செல்லும்முன் திருப்புகலூ ரில் அப்பருடன் எழுந்தருளியிருந்த காலையிலும் அதற்குமுன் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளிய காலையிலுஞ் சிறுத்

தொண்ட நாயனரைக்கண்டு அவரோடு அளவளாவினது தமது நாலரையாண்டிலேயா மென்பதுந் தாமேபோதரும்.

இனி, அப்பரும், அவரைத் தன்புறத்தி அவரது அருளாற் சைவசமயந்தழீஇய முதலாம் மகேந்திரவர்ம பல்லவ வேந்தனுஞ் சமண்மதப் பற்றுவிட்டுச் சிவபிரான் றிருவடிக்கு ஆளானகாலங் கி. பி. ௬௨0-ஆம் ஆண்டிலேயா மென்பதை மேலே நன்கு விளக்கிக்காட்டினம். அப்பர் முதன்முதற் சீர்காழிக்குப்போந்து திருஞானசம்பந்தப் பெருமானைக் கண்டது கி. பி. ௬௨௨-ஆம் ஆண்டிலேயா மென்பதூஉம் மேலே விளக்கினம். அப்போது திருஞானசம்பந்தப் பிள்ளையார் நாலாண்டுடைய தெய்வச் சிறுமதலையா யிருந்தனர். அதன்பிற் சிறுத்தொண்ட நாயனரையும் அவர்தஞ் சிறுபுதல்வர் சீராளரையுங் கண்டபோது பிள்ளையார்க்கு நாலரையாண்டாயிற்று. அதன்பின் அப்பருடன் திருமறைக்காட்டுக்கு எழுந்தருளி, அங்குநின்றும் அப்பரைப் பிரிந்து திருவாலவாய்க்கு எழுந்தருளி மங்கையர்க்கரசியாரையும் அவர்தங் கொழுநரான கூன்பாண்டிய மன்னனையுங் கண்டபோது பிள்ளையார்க்கு ஐந்தாமாண்டு நிரம்பிற்று. எனவே, கி. பி. ௬௨௩-ஆம் ஆண்டிலேதான் பிள்ளையார் ஐந்தாட்டைச் சிறுவரா யிருந்ததூஉங், கூன்பாண்டியனைக் கண்டதூஉமாகும்.

இக் கி. பி. ௬௨௩-ஆம் ஆண்டு கூன்பாண்டிய வேந்தனது ஆட்சியின் துவக்ககாலமோ இறுதிக்காலமோவெனின்; இஞ்ஞான்றை வரலாற்று நூலாசிரியராற் சிறந்த சான்றுகளாகக் கொண்டாடப்படுங் கல்வெட்டுகளைக்கொண்டு, இவ் ௬௨௩-ஆம் ஆண்டு அவ்வரசன்றன் ஆட்சிக்காலத் துவக்கமாதலைக் காட்டுவாம்: யானைமலைக் குகையின்கட் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் இரண்டினுல் 'ஜடிலபராந்தகன்' எனப்படும் 'மாறன் சடையன் பராந்தகன்' என்பான் கி. பி. எஎ0-இல் அரசுவீற்றிருந்தமை துணியப்படுகின்றது. வேள்விக்குடி நன்கொடைப் பட்டையத்தானும், சின்னமனூரிலகப்பட்ட சிறிய

பெரிய செப்பேடுகளானும் இம் 'மாறன் சடையன் பராந்தகன்' என்னும் பாண்டிமன்னனுக்குமுன் அவன்றந்தை 'தேர்மாறன் அரிகேசரி பராங்குசன்' என்னும் 'முதலாம் ராஜசிம்ம' பாண்டியனும், அவனுக்குமுன் அவன்றந்தையாகிய 'பாண்டியன் கோச்சடையனும்', அவனுக்குமுன் அவன்றந்தையாகிய 'கூன் பாண்டியன் நின்றசீர் நெடுமாறன்' என்னும் 'அரிகேசரிமாறவர்மனும்' அரசுபுரிந்தமை தெளியப்பட்டிருக்கின்றது*. இவ்வாறு ஜடிலபராந்தகனையும், அவற்குமுன் அரசாண்ட பாண்டி மன்னர் மூவரையுஞ்சேர்த்து ஒவ்வொருவர்க்கும் முப்பதாண்டு விழுக்காடுவைத்துக் கணக்குச்செய்ய, அந்நால்வர்க்கும் நூற்றிருபதாண்டுகளாகின்றன; இத்தொகையை ஜடிலபராந்தகனிருந்த கி. பி, எஎ0-இற் கழிக்கக், கூன்பாண்டியன் கி. பி. சுரு0-இல் அரசுவீற்றிருந்தமை கல்வெட்டாராய்ச்சியானும் நன்குபுலனுகின்றது. மேற்குறிப்பிட்ட பாண்டியர் ஒவ்வொருவர்க்குங் குத்துமதிப்பாய்க் கணக்குசெய்யும் முறையில் முப்பதாண்டுகள் வைக்கப்பட்டனவாயினுங், கூன்பாண்டியன் என்னும் நின்றசீர் நெடுமாறர் அம்முப்பதாண்டுகட்குமேல் ஐம்பதாண்டுகள் வரையில் அரசுவீற்றிருந்தமை புலனுகாநிற்கின்றது; என்னை? மேலே காட்டியவாற்றால் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் இப் பாண்டி மன்னனைக் கி. பி. சுஉந-இல் வந்து கண்டமை துணியப்பட்டதாகலினென்க. கூன்பாண்டியன் திருஞானசம்பந்தப் பெருமானுக்கு இழைப்பித்த கொடுந்தீவினையாற் கொடியதொரு வெப்புநோய்கொள்ள அந்நோயே அவனுடம்பிலிருந்த நச்சுநீரையெல்லாம் உறிஞ்சி அதனைத் தூய்தாக்கவும் அதனல் அவன் நீடுவாழவுந் தமது திருவுளத் தெண்ணிப் பிள்ளையார் அவனுக்குத் திருநீறு அளித்து "வேந்தனும் ஓங்குக" எனுந் தமது அருளுரையாற்றலால் அவன் கூனும்நிமிர்ந்து 'நெடுமாறன்' ஆகவும்

* 'The Pallavas' by Prof. G. Jouveau-Dubreuil, pp. 67-69.

அருள்புரிந்தாராகலின், இப்பாண்டிமன்னன் ஐம்பதாண்டுகள் செங்கோல் செலுத்தினமை வாய்வதேயாமென்க.

அற்றாயினும், மேலே யெடுத்துக்காட்டிய கல்வெட்டாராய்ச்சியால் நின்றசீர் நெடுமாற பாண்டியன் கி. பி. கூநு0-ஆம் ஆண்டில் அரசுவீற்றிருந்தமை மட்டும் பெறப்படுகின்றதல்லாமல் அதற்குமுன்னே அவன் கி. பி. கூஉரு-ஆம் ஆண்டிலும் இருந்தானென்பது பெறப்படவில்லையாலெனிற்; கி. பி. கூஉரு-ஆம் ஆண்டிலிருந்ததுடன், சிறிதேறக்குறையக் கி. பி கூஉ0-ஆம் ஆண்டளவிலேதான் அப்பாண்டிமன்னன் அரியணையேறி அரசுசெலுத்தத் துவங்கினனாதல் வேண்டுமென்பதூஉம் ஈண்டொருசிறிது விளக்கிக்காட்டுதும். நின்றசீர் நெடுமாறற்கு மகனான 'கோச்சடையன்' என்னும் பாண்டிமன்னன் கி. பி. கூஎரு-ஆம் ஆண்டில் அரசுவீற்றிருந்தமையுங், கி. பி. கூஎச-ஆம் ஆண்டின்கண் வடநாட்டிலிருந்து படையெடுத்துவந்த சாளுக்கிய வேந்தனாகிய 'முதலாம் விக்கிரமாதித்தனை' அவன் மருதூரிலும் மங்கலபுரத்திலும் எதிர்ந்து தோல்வி பெறச்செய்தமையும், அவ்வாறு அவன் அச்சாளுக்கியமன்னனை எதிர்ந்துநின்றழித் தொண்டைநாட்டரசனான 'முதலாம் பரமேசுரவர்மனும்' அவன்றன்மகன் 'இரண்டாம் ராஜசிம்மனும்' அவற்குத் துணையாய் நின்று அவ்விக்கிரமாதித்தனொடு பொருது அவனைத் தமிழகத்தினின்று துரத்திவிட்டமையும் 'வேள்விக்குடி', 'கேந்தூர்' என்னும் இடங்களில் அகப்பட்ட பட்டையங்களைக் கொண்டு வரலாற்று நூலாசிரியர்களால் நன்காராய்ந்து காட்டப்பட்டிருக்கின்றன*. இனிக், 'கோச்சடையன்' நின்றசீர் நெடுமாற பாண்டியற்கு மகனாதல்போலவே, 'முதலாம் பரமேசுரவர்மனும்' வாதாவிகொண்ட முதலாம் நரசிம்மவர்மன் ஆகிய 'முதலாம் ராஜசிம்மனுக்கு' மகன் ஆவன். இந்நரசிம்மவர்மன் மகளைக் கோச்சடையன் மணந்து கொண்டமையால், அவள் வயிற்றிற்பிறந்த தன்மகனுக்கு

* Ibid, p. 68.

அவன்றன் பாட்டனின் சிறப்புப்பெயரான 'ராஜசிம்மன்' என்பதனை இயற்பெயராகச் சூட்டினன். அங்ஙனமே, முதலாம் பரமேசுரவர்மனுந் தன்மனையாள் வயிற்றிற் பிறந்த தன் மகனுக்கும் அவன்றன் பாட்டன் சிறப்புப் பெயராகிய 'ராஜசிம்மன்' என்பதனை இயற்பெயராகச் சூட்டினன். இவ்வாற்றால், கோச்சடையன் என்னும் பாண்டிமன்னனும், முதலாம் பரமேசுரவர்ம பல்லவ வேந்தனும் நெருங்கிய மைத்துனக் கிழமை யுடையராதலும், அதுபற்றியே அவ்விருவரும் ஒருங்கு சேர்ந்து வடக்கிருந்து வந்த பகைமன்னனான சாளுக்கிய விக்கிரமாதித்தனை எதிர்ந்து வென்று துரத்தினராதலும் வரலாற்று நூலாரால் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன*. ஆகவே, கி. பி. ௬௭௪-ஆம் ஆண்டில் இச்செந்தமிழ் நாட்டின் தென் பகுதிக்கண் அரசுபுரிந்த பாண்டிமன்னனும், வடபகுதிக்கண் அரசுபுரிந்த பல்லவ அரசனும் நெருங்கிய சுற்றத் தொடர்புடையராய் ஒருவரோடொருவர் அன்பினால் அளவளாவி நின்றன ரென்பதும், அவ்விருவர்க்கும் அஞ்ஞான்று பகைவனாய் அவரொடு முரணிநின்றோன் வடநாட்டுச் சாளுக்கிய மன்னனான முதலாம் விக்கிரமாதித்தனேயாவ னென்பதும் நன்கு பெறப்படுதல் காண்க.

இனிக், கி. பி. ௬௭௪-ஆம் ஆண்டுக்குமுன் தென்றமிழ் நாட்டில் அரசுவைகிய 'நின்றசீர் நெடுமாற பாண்டியன்' தன் மகன் கோச்சடையனுக்கு, வாதாவிகொண்ட நரசிம்மவர்ம பல்லவன் மகளை மணஞ்செய்து கொண்டமை மேற்காட்டிய வாற்றால் நன்கு விளங்குதலின், நெடுமாறனும் நரசிம்மவர்ம பல்லவனுந் தம்முள் நட்புரிமை வாய்ந்தனரா யிருந்தமையுந் தானே பெறப்படும். இதுகொண்டு, நெடுமாறன் நெல்வேலிப் போர்க்களத்தில் வென்று துரத்தினது நரசிம்மவர்மபல்லவனை அன்றென்பதூஉம், அங்ஙனம் அவனாற் போர்முனையில்தோல்வியுண்டோன் தமிழ்நாட்டு வடவெல்லைக்குப் புறம்பான வடபுல

* Ibid, p. 68.

வாதாவியில் அரசுபுரிந்த சாளுக்கியமன்ன னொருவனே யாவ னென்பதூஉஞ் செவ்வனே முடிக்கப்படும்.

இனி, நெடுமாறன்மேற் படையெடுத்துவந்த சாளுக்கிய மன்னன் யாவனென்பது ஆராயற்பாற்று. நெடுமாறற்குமக னன 'கோச்சடையன்'மேற் போர்க்கெழுந்துவந்து தோல்வி யுற்றோன் முதலாம் விக்கிரமாதித்தன் என்னுஞ் சாளுக்கிய வடபுலமன்னனேயாதலும், அங்ஙனம் அவ்விருவர்க்குள்ளும் மூண்டபோர் கி.பி. ௬௭௪-ஆம் ஆண்டில் நிகழ்ந்ததாதலுந் துணி யப்பட்டுக் கிடத்தலின், கோச்சடையன் அரியணையேறி அரசு வீற்றிருக்கத் துவங்கியதும், அவன் றந்தையாகிய நின்றசீர் நெடுமாறன் இறைவன் றிருவடிநீழலெய்தியதுஞ் சிறிதேறக் குறையக் கி. பி. ௬௭0-ஆம் ஆண்டில் நிகழ்ந்ததாகல்வேண்டும். கோச்சடையன்மேற் படையெடுத்துவந்த முதலாம் விக்கிர மாதித்த சாளுக்கிய மன்னனே, கி. பி. ௬௪௨-ஆம் ஆண்டில் நரசிம்மவர்ம பல்லவ வேந்தற்குப் படைத்தலைவராய்ப் படை யெடுத்துப்போந்த சிறுத்தொண்ட நாயனரோடு பொருது அப் போரில் இறந்துபட்ட இரண்டாம் புலிகேசமன்னற்கு மகனா வன். இங்ஙனமாகக், கோச்சடையனை வந்தெதிர்த்தவன் முத லாம் விக்கிரமாதித்தனென்பது தெளியப்படவே, கோச்சடை யற்குத் தந்தையான நின்றசீர் நெடுமாறனை வந்தெதிர்த்த சாளுக்கிய வேந்தன் விக்கிரமாதித்தனுக்குத் தந்தையான இரண்டாம் புலிகேசனே யாவனென்பது ஒருதலை. புலிகேச மன்னன்றன் போர்த்திறத்தினையும் அவன் படையெடுத்துச் சென்ற நாடுகளையும் விரித்துரைக்கும் ஒரு செப்புப் பட்டைய மானது கி. பி. ௬௩௪-ஆம் ஆண்டில் வெட்டப்பட்டதாகும்*. வடக்கே வடுகுநாட்டின்கண் எல்லூருக்குங் குண்டூருக்கும் இடையிலிருந்த ஊர்கள் அத்தனையும் முதலாம் மகேந்திர வர்மனுக்கு உரியவாயிருந்தன ; தன்னாட்டுக்கு அருகிருந்த

* Prot. R. G. Bhandarkar's Early History of the Dekkan, 1884, p. 39.

அவ்வூர்களை இரண்டாம் புலிகேசன் நடுவுநிலையிகந்து கி. பி. சுகO-ஆம் ஆண்டிற் கவர்ந்துகொண்டான். அதுமுதல் தமிழ் நாட்டின் வடபகுதியிலிருந்த பல்லவ அரசர்க்குந், தமிழ்நாட்டின் வடவெல்லைக்கு அப்பாலிருந்த சாளுக்கிய மன்னர்க்குந் தீராப் பகை உண்டாவதாயிற்று*. புலிகேசன் அவ்வாறு மகேந்திரவர்ம பல்லவற் குரிய வடுக நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டபிற், சிலஆண்டுகள் கழித்துத், தமிழ்நாட்டின்மேற் படையெடுத்துவந்து, பல்லவவேந்தர்க்குத் தலைநகரான திருக் கச்சியைக் (காஞ்சிபுரத்தை) முற்றுகைசெய்தான். அக்காலம் மகேந்திரவர்ம பல்லவன்றன் மகனை முதலாம் நரசிம்மவர்ம பல்லவனது ஆட்சி துவங்கியகாலமா யிருத்தல் வேண்டும்; ஏனென்றால், அங்ஙனம் வந்தெதிர்த்த புலிகேச மன்னனைத் துரத்த மாட்டாமல் நரசிம்மவர்மன் பின்னிடைந்தானென 'ஐகோ'லில் அகப்பட்ட கல்வெட்டானது நுவலாநிற்கின்றது. இந்நரசிம்மவர்மன் அரசாளத்துவங்கிய காலம், இவன்றந்தை 'மகேந்திரவர்ம பல்லவன்' இறைவன்றிருவடி யெய்திய கி. பி. சுஉரு-ஆம் ஆண்டே யாகையாற், புலிகேசன் இவன்மேற் படையெடுத்துவந்து இவனது தலைநகராகிய திருக்கச்சியைச் சூழ்ந்துகொண்டது இவன்றன் ஆட்சி துவங்கி ஐந்தாண்டுகள் சென்றபின் அதாவது கி. பி. சுஙO-ஆம் ஆண்டில் நேர்ந்ததா யிருத்தல்வேண்டும்†. அற்றன்று, மகேந்திரவர்மனது ஆட்சியின் இறுதிக்காலத்திலேயே புலிகேசன் காஞ்சிநகர்மேற் படையெடுத்து வந்தானெனிற் படும் இழுக்கென்னையெனின்; அக் காலையில் நருமதை யாற்றங்கரைக்கு வடக்கிலும் இமயமலைக்குத் தெற்கிலும் உள்ள வடநாடுமுழுமைக்கும் ஒருதனிவேந்தனைக் கன்னோசிநகரில் அரசுசெலுத்திய 'ஹர்ஷன்' என்பான், நருமதை யாற்றங்கரைக்குத் தெற்கேயுள்ள சாளுக்கியநாட்

* Prof. G. J. Dubreuil's The Pallavas, p. 37, and Dr. V. Smith's The Early History of India, p. 472.

† Ibid, p. 425.

டையுங் கைப்பற்றுதற்பொருட்டுக் கி. பி. ௬௨0-ஆம் ஆண்டிற் படைமேற்கொண்டுவரப், புலிகேசன் அவனைத் தடைசெய்து அவன் தனது நாட்டின்மேல் வராதபடி அவனுடைய யானைப் படைகளைக் கொன்று அவனைப் பின்னிடையச் செய்தனன். இவ்வாறு கி. பி. ௬௨0-ஆம் ஆண்டுமுதற் பல ஆண்டுகள்வரையிற் புலிகேசன் தனதுநாட்டின்மேல் 'ஹர்ஷன்' வராமல் அவனைத் தடைசெய்து அதனைப் பாதுகாக்கும்முயற்சியில் நின்றமையால், அவன் மகேந்திரவர்மனது ஆட்சியின் இறுதிக்காலமாகிய அப்போது கச்சிநகர்மேற் படைதிரட்டிவருதல் சிறிதும் இயலாது. போராண்மைமிக்க ஹர்ஷவேந்தன் தனது நாட்டினுட் புகாவாறு அதன்வடவெல்லையில் தன் காவற்படைகளை நிறுத்தி அதனைப் பாதுகாக்கும் முயற்சியிற் சிறிதேறக்குறையப் பத்தாண்டுகள்வரையிற் புலிகேசன் உறைத்துநின்றமை ஆராய்ச்சியாற் புலனாகின்றது. ஏனெனில், ஹர்ஷவேந்தன் நருமதை யாற்றங்கரைக்குத் தெற்கேவரும் முயற்சியைக் கைவிட்டு மேல்கரைக்கண் உள்ள 'வலபை'நாட்டின்மேற் படையெடுத்துச் செல்லும் முயற்சியைக் கி. பி. ௬௩0-ஆம் ஆண்டிற்குச் சிறிது முன்னே துவங்கி, அதன்பிற் சிறிது காலத்திலெல்லாம் அந்நாட்டின்மேற் சென்றனன்*. அவ்வாறு அவன் வலபைநாட்டின்மேற் செல்லும் முயற்சியிற் றன்கருத்தைச் செலுத்தினமை திண்ணமாய்த் தெரிந்தபிறகுதான், புலிகேசனுந் தமிழ்நாடு நோக்கிப் படைமேற்கொண்டு பெயர்ந்தானாதல்வேண்டும். இங்ஙனமாகப் புலிகேசன் கி. பி. ௬௨௯-ஆம் ஆண்டிற்குப் பின்னர்த்தான் காஞ்சிநகர்மேற் படையெடுத்து வந்தானென்பது உண்மைச் சான்றுகளால் நாட்டப்படுதலானுங், கி. பி. ௬௨௫-ஆம் ஆண்டொடு மகேந்திரவர்ம பல்லவனது ஆட்சி முடிவுபெற்று அவன்மகன் நரசிம்மவர்ம பல்லவனது ஆட்சி துவங்குதலானும், அவன் மகேந்திரவர்மனது ஆட்சியின் இறுதிக்காலத்தே படையெழுந்து வந்தா

* Ibid, p. 340.

னென்றல் ஒருவாற்ருனும் பொருந்தாதெனவிடுக்க. மற்று, அஃது அவன் மகன் நரசிம்மவர்ம பல்லவனது ஆட்சியின் ருெடக்ககாலத்திலேதான் நிகழலாயிற்றென்பது திண்ணம். பல ஆண்டுகளாகப் போராண்மையிற் பெரிதும்பழகி, ஹர்ஷவேந் தனையும் போரிற் பின்னிடையச்செய்து, போர்த்தொழிலிற் றேர்ச்சிபெற்ற பெரும்படையோடு சடுதியில் தன்மேற் போர்க் கெழுந்துவந்த புலிகேசனை, அப்போதுதான் அரசியற்பொறை தாங்கிய இளைஞனை நரசிம்மவர்ம பல்லவன் எதிர்ந்து வெல்ல மாட்டாது பின்னிடைந்தது வாய்வதேயாம்.

இனி, இவ்வாறு தமிழ்நாட்டின் வடபகுதியிலிருந்த முத லாம் நரசிம்மவர்ம பல்லவனை வென்றடக்கியபின், அதன் நடுப் பகுதியை ஆண்ட சோழமன்னனையும் வென்று, தென்பகுதிக் கண் அரசுவைகிய பாண்டிமன்னனை நெடுமாறன்மேற் செல் வது புலிகேசனுக்கு எளிதாயிற்று. இங்ஙனமாகப், புலிகேசன் தமிழ்நாட்டின்மேற் படையெடுத்துவந்து நின்றசீர் நெடுமாற பாண்டியனை எதிர்த்தது கி. பி. ௬௨௯-ஆம் ஆண்டிற்கு முற் படுதல் இசையாமையானும், இவன் தமிழ்நாட்டின்மேற் சென்ற வரலாறுகளை விரித்துரைக்கும் ஒரு செப்பேடானது கி. பி. ௬௩௪-ஆம் ஆண்டிற் பொறிக்கப்பட்டதாதலை மேலெடுத்துக் காட்டினமாகலானும் நெடுமாறற்கும் இவற்கும் நெல்வேலிக் கண் நடந்தபோர் கி. பி. ௬௨௯-க்குங் கி. பி. ௬௩௪-க்கும் இடைப்பட்டதாகிய கி. பி. ௬௩௦-ஆம் ஆண்டில் நிகழ்ந்த தென்று கோடலே பொருத்தமாம்; வரலாற்று நூலாசிரியரும் ௬௩௦-ஆம் ஆண்டிற் புலிகேசன் நருமதையாற்றுக்குத் தெற் கேயுள்ள நாடுமுழுமைக்கும் பேராற்றலில் மிக்க வேந்தனாய் வயங்கினனெனக் கூறுநிற்பர்*. என்றாலும், புலிகேசன் நெல் வேலிப் போரிற் பாண்டியன் நெடுமாறனை வென்ருன் அல்லன்; அதில் வெற்றிபெற்ருன் நெடுமாறனேயென்பது, திருஞான சம்பந்தப் பெருமானது காலத்தை யடுத்துவந்த சுந்தரமூர்த்தி

* Ibid, p. 425.

பேயுள்ள நீலகிரி மலையிலிருக்குந் தோடர் வடகர் முதலாயினோருந் தமிழ்மொழி பேசத் தெரிந்தவர்களே யல்லாமல் எழுதத்தெரிந்தவர்கள் அல்லர். இன்னும் இந்நாவலந்தீவின்கண் உள்ள மலைகளிலுங் காடுகளிலுங் கடற்கரைப் பக்கங்களிலும் உயிர்வாழும் எண்ணிறந்த மக்கட்பிரிவினரெல்லாருந் தமிழ்மொழியைச் சொல்லளவாகவே வழங்கிவருதலை ஒவ்வொருநாளுங் கண்டறியலாம். இதுபோலவே, நாகரிகவாழ்க்கை யில்லாத மிகப்பழைய காலங்களில் மக்கள் வகுப்பினர் எல்லாருந் தாந்தாம் வழங்கிய மொழிகளை முற்றும் ஒலிவடிவாகவே வழங்கிவந்தனர்; அதன்பின் நாகரிகம் வளர வளர அவ்வொலிகளை எழுத்து வடிவிலிட்டு வழங்கிவந்தனர். இஃது அவ்வம் மக்கள் வகுப்பினர்தம் வரலாற்று நூல்களை ஆராய்தலானும், இஞ்ஞான்றும் நாகரிகமின்றி உயிர்வாழும் மக்களினத்தாரை நேரே சென்று காண்டலானும் நன்கு தெளியப்படும். எனவே, ஒரு மொழியென்பது பண்டுதொட்டு இன்றுகாறும் நாகரிகமுடையாரும், அஃதில்லாருந் தத்தம் உள்ளங்களில் எண்ணிய எண்ணங்களை வெளியே தம்மவர்க்குப் புலப்படுத்தற் பொருட்டுப் பயன்படுத்திவரும் ஒலிக் கூட்டமேயன்றிப் பிறிதன்றென்பது தெற்றென உணரப்படும். இங்ஙனம் பேச்சுவழக்கி லிருப்பதே ஒருமொழியென்று சொல்லப்படுதற்கு இயைந்த சிறப்பியல்பு உடையதாவதல்லது, மக்கட்கூட்டத்தவரால் வழங்கப்படாமல், நூலளவிற் சற்றார் சிலரால்மட்டும் பயிலப்பட்டுவருவது ஒருமொழியாகமாட்டாது. ஆனால், இவ்வுண்மையினைப் பகுத்துணர்ந்து பார்க்கமாட்டாத அச் சிறுசுவடிக்காரரும் அவர்க்குத் துணையாயினோருமோ, தமிழைப்போலவே ஆரியமும் வழக்கிலுள்ளதே யாகுமன்றி இறந்துபட்டதாகாது என்று கட்டுறுத்திச் சொல்கின்றார். அற்றேல், தமிழ்மொழி பேசும்மக்கள் எல்லாரிடத்தும், அவர் சற்றவராயினுங் கல்லாதவராயினும் நாகரிகராயினும் அஃதிலராயினும் பெண்டிராயினும் பிள்ளைகளாயினும், அவரெல்லார் மாட்டும் நாம் தமிழில் உரையாடினால், அவரெல்லாரும் நாம்சொல்வ தின்னதென உணர்ந்து நம்மொடு தாமும் நன்குரையாடி மகிழ்வர். இதுபோல், நாம் ஆரியத்தில் எல்லாரோடும் பேசுதல் இயலுமோ? அல்லது அதிற் கடிதமாவது எல்லார்க்கும் எழுதுதல் இயலுமோ? எல்லாவகையான மக்களும் வந்து நிறைந்த ஓரவைக்களத்தில் ஆரியத்திற் சொற்பொழிவு நிகழ்த்தி அதனை அங்குள்ளாரெல்லாரும் உணரும்படி செய்தல் இயலுமோ? மழலைச்சொற் பேசும் எந்தச் சிறுமகாரோடேனும் ஆரியத்தில் உரையாடி மகிழ்தல் வாய்க்குமோ? வாயாதன்றே. இவ்வாறு உலக வாழ்க்கைக்கண் உள்ள எந்த மக்கட் கூட்டத்தாரேனுந் தமது வாழ்க்கையை நடத்துதற்குப் பயன்படு கருவியாக ஆரியமொழியினை வழங்கக்காணாமையின், அவ்வாரியமொழி உலகவழக்கிலில்லாது இறந்துபட்ட மொழியேயாகுமல்லாமல், எண்ணிறந்த மக்களால் தமதுயிர் வாழ்க்கைக்குச் சிறந்த பெருங் கருவியாகப் பயன்படுத்தப்பட்டுவருந் தமிழ்மொழியைப்போல் உயிருடையதாகமாட்டாது. பார்ப்பனர் சிலரும் அயலார் சிலரும் பல்லாண்டுகளாக வருந்திப் பயில்வதொன்றேகொண்டு ஆரியமொழியை உயிருடையதென்று கூற அறிவுடையார் எவரும் ஒருப்படமாட்டார். ஆரியமொழியைப் போலவே உலகவழக்கின்றி இறந்துபட்ட 'இலத்தீன்', 'கிரீக்கு', 'ஈபுரு' முதலான பண்டை மொழிகளையும் பயில்வார் ஆங்காங்கு உளரேனும், அதுபற்றி அவைதம்மை உயிருடைய மொழிகளென்று கூறுவாரெவரையும் யாண்டுங் கண்டிலேம். உயிர்போன உடம்பை மணம்ஊட்டி அழியாமற் பாதுகாத்துவைத்து அதனைக் கண்டு ஆறுதல் எய்தும் அதற்குரியார்போல, உயிரில்லாத ஆரியம் முதலான மொழிகளையும் அவற்றிற்குரியார் அம்மொழிகளி லெழுதப்பட்ட நூல்களால் மணம்பெறச்செய்து அவ்வாற்றால் அவைதம்மை முழுதும் அழிந்தொழியாவாறு வைத்துப் பாதுகாத்து வருகின்றனரென்க. மற்றுத், தமிழ்மொழியோ அங்ஙனம் ஒரு சிலரால் வருந்திப் பாதுகாக்கப்படும் வெற்றுடம்பு அன்றாய், என்றுமுள தெய்வத்தன்மை வாய்ந்த உயிருடன் உலவுவதென்பதனைச் சிறுமகாரும் இனிதுணர்வாராகலின், நாடோறும் நம்மைக் கண்ணுங் கருத்துமாய் வளர்த்துவரும் எம் தெய்வத் தமிழ் அன்னையை இழித்துப்பேசி, இறந்துபட்ட ஆரியமாதை உயர்த்துப்பேசுவார்தம் மடமையையுங் குறும்பையும் என்னென்பேம்! அது நிற்க,

(தொடரும்.)

## சர்வ வருண சமரசவிளக்கம்

இந்நூல், திருச்சிராப்பள்ளி, சௌந்தரபாண்டியன் பிள்ளை தெரு, 24-ஆம் எண்ணுள்ள இல்லத்திலிருக்குந் திருவாளர் C. P. இராஜகோபால பாரதியார் அவர்களால் தமிழுரைநடையில் எழுதப்பட்ட ஒரு சிறந்த வரலாற்று நூலாகும். இதனை எமது கருத்துரைக்காக விடுத்த பாரதியாரவர்கட்கு மிகவும் நன்றி செலுத்துகின்றோம்.

நோய்வாய்ப்பட்ட ஒருவருடம்பை நலமுடனிருந்து வாழச்செய்ய விரும்பினால் அவ்வுடம்பிலுள்ள நோயின் றன்மையையும் அஃது அவ்வுடம்பிலிருக்கும் இடத்தையும், அஃது எவ்வாறு அவ்வுடம்பின் நலத்தைச் சிதைத்துவருகின்ற தென்பதையுஞ் செவ்வையாக ஆராய்ந்துபார்த்து, அதன்பின் அந்நோய் தீர்க்கும் முறைகளைக் கைக்கொள்ளல் வேண்டும். அதைப்போல் ஒரு மக்கட் கூட்டத்தைச் சீர்திருத்தல்வேண்டி ஒருநூல் எழுதுவோரும், அம்மக்கட் கூட்டத்திற்கு நேர்ந்துள்ள பொல்லாங்கின் றன்மையினையும், அப்பொல்லாங்குக்குப் பற்றுக்கோடாவார் இவரென்பதையும், அவர் எவ்வாறு அக்கூட்டத்திற்குத் தீங்கிழைத்து வருகின்றா ரென்பதையுஞ் செவ்வையாக ஆராய்ந்து காட்டி, அதன்பின் அக்கூட்டத்திற்குநேர்ந்த அப்பொல்லாங்கினை ஒழிக்கும் வழிவகைகளைக் காட்டல்வேண்டும். இவ்வியல்பிற்றாகிய நூலெழுதுமுறையிற் சிறிதும் வழுவாமல் இந்நூலாசிரியர் இதனை நடுவுநின்று நன்கெழுதியிருப்பது மிகவும் பாராட்டற்பாலது.

இனித், தமிழ்மக்கட் பெருங்கூட்டமாகிய உடம்பில் வேரூன்றி நிற்கும் பொல்லாத நோயாவது சாதிவேற்றுமையே யாதலும், அச் சாதிவேற்றுமைக்குப் பிறப்பிடமாவார் ஆரியரும் அவரைப் பின்பற்றி அவர்தம்மோடுடன் கலந்த தமிழர்க்குப் பிறந்த பார்ப்பனருமே யாதலும், இவ் விருபிறப்பாளர் வேள்வி யென்னும் பெயரால் தீங்கற்ற ஆடு மாடு குதிரைகளையும் ஆறறிவுடைய மக்களையுங்கொன்று, சோமப்பூண்டில் வடித்த கள்ளைக்குடித்து, மாதர் பலரைப் புணர்ந்து, இவ்வாற்றால் தமிழரசர்கள் செல்வர்களின் பெரும் பொருளைக் கவர்ந்து, இவ் விழிதொழில்களைச் செய்துகொண்டே தம்மை யுயர்த்தித், தம்மவரல்லாத ஏனையோரை யெல்லாந் தாழ்த்தித், தாம் செய்துபோதரும் இக் கொடுஞ் செயல்களுக்கு ‘வர்ணாசிரமதருமம்’ என்னும் வடமொழிப் பெயரைப் புனைந்து அவற்றின் கொடுமை தெரியாமல் மறைத்து, இங்ஙனமாகத் தமிழ்ப் பெருநாகரிக மக்கட்கூட்டத்தின் பெருநலனைச் சிதைத்து வருதலை அந்நோயின் செயலாதலும் பல உண்மைச் சான்றுகளுடன் நன்குவிளக்கி, அதன்பின் தமிழருடம்பிற்பாய்ந்த இவ்வாரியக் கொடுநோயைத் தீர்க்கவல்ல வழிகளைக் காட்டியிருக்கின்றார்கள்.

ஆரியக் கொடுநோயாற் பற்றப்பட்டு அந்நோயையே நலமாகப் பிறழக் கருதி அதனை யுயர்த்துப்பேசுந் தமிழ்ப்புலவர்களே மலிந்த இந்நாளில், அந்நோயின் கொடுமையினை ஒரு சிறிதும் ஒளியாமல் உள்ளபடி எடுத்துக்காட்டும் உண்மை உறுதிப்பாடுடைய பெரியார் நம் இராஜகோபால பாரதியாரவர்களைப் போன்ற மிகச் சிலரேயாவர்.

பாரதியாரவர்களால் இயற்றப்பட்ட இந்நூலில் ஒரு சிறு குறைபாடுங் காணப்படுதலை வருத்தத்துடன் தெரிவிக்கக் கடமைப்பட் டிருக்கின்றேம். ஆரியராலும் அவர்தம் வழக்கவொழுக்கக் கலப்பாலுந் தமிழர்க்குநேர்ந்திருக்கும் பெருந் தீமையைப்போலவே, அவ்வாரியர்தம் மொழியாகிய சமஸ்கிருதக்கலப்பாலுந் தமிழ்மொழிக்கு நேர்ந்திருக்குந் தீங்கும் மிகப் பெரிது. ஆரியர்தம் வழக்க வொழுக்கப் பெருநோய்த் தொடர்பை நீக்க முன்னெழுந்து நிற்கும் பாரதியாரவர்கள், அவ்வாரியர்தம் மொழியாகிய சமஸ்கிருதத்தின் கலப்பால் தமிழ்க்கு நேர்ந்திருக்கும் பெருநோயின் தொடர்பையும் அறவேநீக்கவேண்டியவர்களாயிருக்க, அதுசெய்யாமல் அளவிறந்த வடசொற்களை இந்நூலின் தமிழுரையிற் கலந்தெழுதி யிருக்கின்றார்கள். அதுவேயுமன்றி, இலக்கண இலக்கியப் பிழைகளும் அச்சுப்பிழைகளும் இதன்கண் மிகுந்துள்ளன. இக்குறைபாடுகளை யெல்லாம் பாரதியாரவர்கள் இதன் இரண்டாம் பதிப்பில் நீக்கி விடுவார்களாகவென்று இறைவனை வேண்டுகின்றோம்.

இவ்வரியநூலைத் தமிழுணர்ந்தார் அனைவரும் வாங்கிக் கற்றல்வேண்டும்; இது 164 பக்கங்கள் உள்ளது; விலை ஒரு ரூபா.